(தைத்திரீய ஸம்ஹிதையிலிருந்து)

# ருத்ர மந்திரங்கள்

நமகம், சமகம், ஶிவ ஶங்கல்பம் அந்தர் யாகம், ஸுபர்ணா

ஆர். எல். கஷ்யப்

தமிழில்
பத்மா ராகவன்



# ருத்ர மந்திரங்கள்

(தைத்திரீய ஸம்ஹிதையிலிருந்து)

## நமகம், சமகம், ஶிவ ஶங்கல்பம்
## அந்தர் யாகம், ஸுபர்ணா

(மூலமும் உரையும்)

ஆங்கில உரையாக்கம்

**ஆர். எல். கஷ்யப்**

தமிழில்

**பத்மா ராகவன்**

**SAKSI**

ஸ்ரீ அரவிந்தோ கபாலி சாஸ்திரி இன்ஸ்டிட்யூட் ஆஃப் வேதிக் கல்சர்

**RUDRA MANDIRANGAL** - Taittiriya Samhitaiyililirundu (Tamil)
Original in English by R.L. Kashyap. Translated by Padma Raghavan.

Published by :
**Sri Aurobindo Kapāli Sastry Institute of Vedic Culture**
No.63, 13th Main, 4th Block East, Jayanagar,
Bangalore - 560 011
Phone : 080-2245 6315, 0-93412 33221 (Mobile)

e-mail : info@vedah.com
web : www.vedah.org

© 2007, SAKSI

First Edition : 2007

Pages : vi + 143

Price : **Rs. 75/-**

DTP : T. Gopiraj, 94493 47095

Printed at : Sreeranga Printers Pvt. Ltd., Bangalore-560 019

பொருளடக்கம்


1. முன்னுரை

1.1. வேதங்கள் பற்றி

1.2. யஜுர் வேத தைத்திரீய ஸம்ஹிதா

1.3. ஶதருத்ரீயம் - ருத்ர அத்யாயம்

1.4. இந்தப் புத்தகத்தின் பிரத்யேகத் தன்மை

1.5. இந்தப் புத்தகத்தினால் கிடைக்கும் பிரத்யேக பலன்கள்

1.6. ஶிவ - ப்ரஹ்ம - விஷ்ணு

1.7. கணபதி மந்திரம்

1.8. த்ரயம்பக மந்திரம்

2. லகு ந்யாஸம் - அந்தர் யாகத்தின் அடிப்படைக் கொள்கை

2.1. த்யானம்

2.2. சூட்சும உடலின் தேவதைகள்

2.3. த்யானம்

3. நமகம் (T.S.4.5.) அனுவாகம் 1-12

3.1. ருத்ரனை சாந்தப்படுத்தும் துதி

3.2. - 3.9. ஶிவ ருத்ரனின் அடைமொழிகள்

3.10. ஶிவருத்ரனுக்குரிய ரிக் மந்திரங்கள்

3.11. ஶிவருத்ரனுக்குரிய ரிக்-யஜுஸ் மந்திரங்கள்

3.12. இறுதியான மந்திரங்கள்

4. சமகம் (T.S.4.7.) அனுவாகம் 1-11

4.1. ஸ்தூல, ஜீவ, மனோ சக்திகள்

4.2. ஜீவசக்தி - குறிக்கோள்

4.3. மனோ இலக்கு

4.4. உடலின் போஷணை

4.5. இயற்கை சக்திகள்

4.6. பிரபஞ்ச சக்திகள் (தேவர்கள்)

4.7. தேவர்கள் ஸோமனைப் பங்கிட்டுக் கொள்ளுதல்

4.8. யக்ஞத்தின் உபகரணங்களின் சக்தி

*4.9.* ஒளியின் சக்தி - மந்திர ஒலி

*4.10.* பகுதி *1* - ஸங்கேதமாகக் கூறப்படும் மிருகங்கள்

பகுதி *2* - பூரணத்வம்

*4.11.* விவரிக்க இயலாத சக்திபடைத்த எண்கள்

*4.12.* இறுதியான மந்திரங்கள்

**5. அந்தர் யாக முடிவு - அனுவாகம் 12-14**

*5.1.* செழுமையின் (பூரணத்வத்தின்) துவக்கம்

*5.2.* ஆன்மாவின் பயணம் (ஸுபர்ணா)

*5.3.* யக்ஞ முடிவு

**6. ஶிவ ஸங்கல்ப மந்திரங்கள்**

## எழுத்துக்கள் = உச்சரிப்பு

| | | | |
|---|---|---|---|
| क | ख | ग | घ |
| தப்பல் | சக்தரம் | தணபதி | தனம் |
| च | छ | ज | झ |
| சத்திரம் | அச்சம் | ஜலம் | ஜண்டா |
| ट | ठ | ड | ढ |
| டவுன் | பட்டம் | டாக்டர் | டமரு |
| त | थ | द | ध |
| தட்டு | ப்ருதிவீ | பதம் | தனம் |
| प | फ | ब | भ |
| படம் | குப்பும் | பலம் | பயம் |

புத்தகத்தின் உள்ள ரிக்குகள் / மந்திரங்களின் சொற்களுக்கு மேல் (நம்பர்கள்) (1-2-3-4) (எண்கள்) கொடுக்கப்பட்டுள்ளன. அந்த அந்த எழுத்துக்களை மேலே கொடுத்துள்ள சொற்கள் போல் உச்சரிக்க வேண்டும்.

அன்பான வாசகர்களே!

தற்கால வாழ்வில், இந்த நவீன யுகத்தில் வேதத்தின் கருத்துகள் எவ்வாறு பொருந்தும்? என்று பலரும் கேட்கின்றனர். ரிஷிகள் வெளிப்படுத்திய வேதங்கள் மனித சமுதாயத்தை உயர்த்துவதற்காக வந்தவை. மனித இனம் பூமியில் உள்ள வரை, அதன் வாழ்வில் வேதங்களுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. நம்முடைய ரிஷிகளின் குறிக்கோளான வாழ்வின் பூரணத்வம் என்பதே நவீன காலத்திலும் எல்லோருராலும் விரும்பித் தேடப்படுகிறது.

இந்தப் புத்தகத்தில் உள்ள ருத்ர மந்திரங்கள் பழக்கமானவையே. அவற்றை ஜபியுங்கள். அவை சொல்லும் செய்திகளை ஊன்றிக் கவனியுங்கள். அவை அன்றாட வாழ்வில் ஏற்படும் இன்னல்களைப் போக்க உதவுபவை. உறங்குப் போகும்முன் சொல்ல வேண்டிய ஶிவ ஸங்கல்ப மந்திரங்களைச் சொல்லிவிட்டு, நிம்மதியாக உறங்குங்கள்.

இந்த மந்திரங்கள் தெய்வ சக்திகளுடன் இணக்கத்தை உண்டு செய்து, ஆக்க பூர்வமான அமைதியான வாழ்வை அடைய உதவி செய்யும்.

அமைதி எங்கும் நிலவ வேண்டும் என்பதே எங்கள் விருப்பமும் குறிக்கோளும்.

பதிப்பாளர்

# 1. முன்னுரை

## 1.1. வேதங்களைப் பற்றி :

''வேதங்கள், நம்முடைய ஆன்மீக அறிவின் தொடக்கம். அந்த அறிவின் முடிவும் அவையே.'' -அரவிந்தர். வேதம் என்பது வெவ்வேறு ரிஷிகளுக்குப் புலப்பட்ட மந்திரங்களின் தொகுப்பு என்பது நம்முடைய சம்பிரதாயமான கருத்து. க்ருஷ்ண த்வைபாயன வ்யாஸர் இந்த ஒரு மூலத்திலிருந்து நான்கு தொகுதிகளை வகுத்தார். அவை ரிக், யஜுர், ஸாம, அதர்வ வேத ஸம்ஹிதைகளாகும். இந்த 4 வேதங்களின் பெயர்கள் - சுக்ல யஜுர் வேதம் (31-9), அதர்வ வேதம் (10.7.20) முதலியவற்றில் தெளிவாகவே குறிப்பிடப்படுகின்றன. பரம்பொருள் ரிஷிகளுக்கு வெளிப்படுத்திய உண்மைகள், மந்திரங்கள் இந்த 4 தொகுதிகளிலும் அடங்கும்.

வேத மந்திரம் சாதாரணமாகப் பார்த்தால் ஒரு செய்யுளே. ஆழ்ந்து நோக்கினால் அது ரிஷிகளின் ஆன்மாவில் ஏற்பட்ட உள்ளுணர்வுகளின் வடிவம் என்பது புரியும். இது உலகங்களைத் தோற்றுவித்த இன்னும் தோற்றுவித்துக் கொண்டிருக்கிற 'ரிதம்' என்று சொல்லப்படும் ரிஷிகளால் உணரப்பட்ட சத்தியத்தின் குரலே. மந்திரங்கள் எந்த ரிஷிக்கு வெளிப்பட்டனவோ, அந்த ரிஷியின் தபஸை உள்ளடக்கியவை. விதிக்கப்பட்ட முறையில் சொல்லப்பட்டால், வேதங்களுடன் அறிமுகம் இல்லாத ஒருவன் கூட, கேட்டவுடன் வேதத்தின் சக்தியை உணர முடியும்.

ஹிந்து சம்பிரதாயத்தில் வேதங்கள் எல்லா ஞானங்களுக்கும் ஆதாரமாகக் கருதப்படுகின்றன. பிற்காலத்தய உபநிஷத்துகளும், வேதாந்தங்களும் சொல்லும் கருத்துகளும், யோக முறைகளும் வேதங்களையே அடிப்படையாகக் கொண்டவை.

1 1 1 1 3
**ருசம் வாசம் ப்ரபத்யே**

1 1 3
**மனோ யஜு: ப்ரபத்யே**

1 1 1 3
**ஸாம ப்ராணம் ப்ரபத்யே**

1 1 1 13
**சக்ஷு: ஶ்ரோத்ரம் ப்ரபத்யே**

''முழுமையான பூரணத்துவம் அடைவிக்கும் எண்ணங்களையும், வாக்கையும் ரிக்வேத மந்திரங்கள் விவரிக்கின்றன. அனைத்துச் செயல்களுக்கும் ஆதாரமான மனதை யஜுர் வேதம் வளமடையச் செய்கிறது. நம்முடைய ஜீவ சக்தியான ப்ராணனை வளர்ப்பதன் மூலம், நம்முடைய திறமையின் பூரணமான வெளிப்பாட்டை, ஸாம வேதம் உண்டாக்குகிறது. நம்முடைய உடலையும் கண்கள், செவிகள் ஆகிய புலன்களின் செயல்களையும் முழுமையாக்கும் விதத்தை அதர்வ வேதம் விவரிக்கிறது''.

## *1.2. யஜுர் வேத தைத்ரீய ஸம்ஹிதா*

*யஜுர் வேத ஸம்ஹிதா K.Y.V. (க்ருஷ்ண யஜுர் வேத ஸம்ஹிதா) S.Y.V. (சுக்ல யஜுர் வேத ஸம்ஹிதா) என்ற இரண்டு பாடமுறைகளைக் கொண்டது. தைத்ரீய ஸம்ஹிதா க்ருஷ்ண யஜுர் வேதத்தின் ஒரு ப்ரத்யேகமான பாடமுறை. இந்த புத்தகத்தில் வரும் ருத்ரனின் துதி, தைத்ரீய ஸம்ஹிதையில் உள்ளது.*

## *1.3. ஶத ருத்ரீயம் - ருத்ர அத்யாயம்*

*11 அநுவாகங்களைக் கொண்ட 4ஆவது காண்டத்தின், 5ஆவது ப்ரபாடகம், மிகவும் ப்ரபலமான ருத்ர அத்யாயம் ஆகும். ''நம:'' என்ற சொல் ஶிவருத்ரனைக் குறித்த இந்தப் புகழ்மாலையில் அடிக்கடி வருவதனால் இந்த ப்ரபாடகம் 'நமகம்' என்றும் சொல்லப்படுகிறது. புருஷ ஸூக்தத்திற்கும், காயத்ரி மந்திரத்திற்கும் இணையாக இந்த ருத்ர*

அத்தியாய பாராயணம் வழக்கத்தில் உள்ளது. தினமும் ருத்ர ஜபமும்/ருத்ர பாராயணமும் செய்பவர் அனேகர். சிவராத்திரி மஹோத்ஸவத்தில் கூட்டம் கூட்டமாக ருத்ர பாராயணம் செய்யப்படுகிறது. நமகத்துடன், 4ஆவது காண்டத்தில் 7வது ப்ரபாடகத்தில் காணப்படும் சமகமும் சொல்வது வழக்கத்தில் உள்ளது. அதையும் இந்தப் புத்தகத்தில் காணலாம். ருத்ர அத்தியாயம் ஶத ருத்ரீயம் என்றும் சொல்லப்படுகிறது. (ருத்ரனை 100 வழிகளில் துதித்தல்) இது முக்கியமான 60 உபநிஷத்துகளில் ஒன்றாகக் கருதப் படுகிறது. கைவல்ய (Verse 24) ஜாபால (Verse 3) அதர்வ ஶீரஸ் (Verse 7) ஶதபத ப்ராம்மண (9.1.1.2.) முதலிய வற்றில் ஶத ருத்ரீயம் புகழப்படுகிறது. இதனுடைய பல துதிகள் நீல ருத்ர உப நிஷத்திலும் காணப்படுகின்றன. அநுவாகம் 1,10,11-ரிக் வேத மந்திரங்களால் ஆனவை. ஆனால் இவற்றில் மிகச் சிலதே ரிக்வேத ஸம்ஹிதையில் காணப்படுகின்றன. மீதியுள்ள அநுவாகங்கள் யஜுஸ் மந்திரங்களால் வெவ்வேறு சந்தஸ் களில் அமைந்தவை. ஸத்வலேகரின் பதிப்பின்படி, இந்த மந்திரங்களின் ரிஷி 'அக்னி' என்றும், பட்டபாஸ்கரரால் 'ஶம்பு' என்றும் சொல்லப்படுகிறது. 5வது ப்ரபாடகத்தின் பல மந்திரங்களை சுக்ல யஜுர் வேதத்தின் வாஜஸனீய, மாத்யந்தின ஸம்ஹிதையின் 16ஆவது அத்யாயத்திலும் காணலாம்.

'பஞ்சாக்ஷரி' என்று சொல்லப்படும் **'நமஶிவாய'** (ருத்ரனுக்கு நமஸ்காரம்) மந்திரத்தை 4.5.8.10.ல் காணலாம்.

ஸாயனா, பட்டபாஸ்கர மிஸ்ர, விஷ்ணு ஸூரி, அபிநவ சங்கரா முதலியோர் ருத்ரத்திற்கு உரை எழுதியுள்ளனர். ஸாயனா, ருத்ரத்தையும் வேதச் சடங்கின் ஒரு பகுதியாகவே குறிப்பிடுகிறார். விஷ்ணு ஸூரியும், அபிநவ சங்கரரும் அத்வைத வேதாந்தக் கொள்கைகளுடன் ருத்ரம் தொடர்பு உடையது என்று கருதுகின்றனர்.

"நீ திருடன், திருடர்களின் தலைவன், கொள்ளைக் காரன், இலை, கல் முதலியவற்றில் இருப்பவன்" என்று அநுவாகங்கள் 2-லிருந்து 11 வரை காணப்படும் சொற்றொடர் களுக்கு மேற்கூறிய உரை ஆசிரியர்கள் தரும் விளக்கம் சரியாகத் தோன்றவில்லை. நம்முடைய விளக்கங்கள் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன.

## 1.4. இந்தப் புத்தகத்தின் ப்ரத்யேகத்தன்மை

1. கூடிய வரையில் ருத்ரனைப் பற்றிய அடைமொழி களுக்கு மனோரீதியான (Psychological, Spiritual) உட்கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

2. ஒவ்வொரு அனுவாகமும் அதில் விவரிக்கப் பட்டிருக்கிற கருத்துக்களின் பொழிப்புரையுடன் கொடுக்கப் பட்டிருக்கிறது.

3. லகு ந்யாஸத்தின் உட்பொருள் தரப்பட்டிருக்கிறது. நம் சூட்சும சரீரத்தில் நடக்கும் அந்தர் யாகத்தைப் பற்றிய கருத்து சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. வேதத்தில் லகு ந்யாஸப் பகுதி இல்லை என்றாலும், லகு ந்யாஸம் செய்வது ருத்ர பாராயணத்தின் ஒரு பகுதியாக வழக்கில் உள்ளது.

4. T.S.4.5.ல் காணப்படும் நமகமும், T.S.4.7.ன் முதல் 11 அநுவாகங்களினால் சொல்லப்படும் சமகமுமே ஸம்பிரதாயப் பாராயண முறையில் காணப்படுகிறது. அந்தர் யாகத்தைப் பற்றி அறிய விரும்பும், அதன் பலனை அடைய விரும்பும் பக்தர்களுக்கு, மிகுதியான 4 அநுவாகங்களும் உபயோக மானவை. T.S.4.7.14 ல் விவரிக்கப்படும் ஆன்மாவின் பயணம் ருத்ரத்தின் உட்கருத்துகளை மிகவும் அழகாகப் பிரகடனப் படுத்துகின்றன. அவையும், இந்தப் புத்தகத்தில் இணைக்கப் பட்டுள்ளன.

## 1.5 ருத்ரமும் வேத யோகமும்

### எல்லாவிதங்களிலும் பூரணத்துவம்

தைத்ரீய ஸம்ஹிதையின் எல்லா மந்திரங்களும், முக்கியமாக 4ஆவது காண்டத்தில் காணப்படும் ருத்ரமும், அந்தர் யாகத்தைச் சாராம்சமாகக் கொண்ட வேதயோகத்தை விவரிக்கின்றன.

யக்ஞம் என்பது ஒரு பயணமே. வேதயோகத்தின் குறிக்கோள் சமூகத்திலும், தனி மனிதனிடத்திலும் பூரணத்து வத்தை நிலைநாட்டுவதே. மனிதனிடம் உள்ளுறையும் முழு சக்தியையும் வெளிக்கொண்டு வருவதே இந்தக் குறிக்கோள்.

அந்த சக்தி சூட்சும உடலுடன் தொடர்புடையதானாலும், ப்ராண சக்தியானாலும், மனோ சக்தி ஆனாலும் அல்லது மனதுக்கும் அப்பாற்பட்ட தானாலும், அவற்றை முழுமை யாக்கி, வெளிப்படுத்துவது வேதயோகமாகும். மனிதனின் ஸ்தூல உடலிலும், அதன் வெவ்வேறு அங்கங்கள், புலன்கள் இவற்றிலும் அந்த வளர்ச்சி வெளிப்படுகிறது. ஆனால் இந்த வளர்ச்சியோ, பூரணத்வமோ உடனே அடைய முடியாது. அந்த வளர்ச்சி (அல்லது மேல் நோக்கிய பயணம்) ஏழு நிலைகளைக் கொண்டது. ஒவ்வொரு ப்ரபாடகமும் ஒவ்வொரு நிலையை குறிக்கிறது.

**ப்ரக்ஞான வளர்ச்சி/விழிப்பு**

**எவர் பயணிக்கிறார்?**

ஆன்ம வளர்ச்சியை நாடுபவரின் ஆத்மா, அதனுடன் சேர்ந்த ப்ராண சக்திகளுடன், சூக்ஷ்ம சரீரங்களுடன் ஒளி உலகை (ஸ்வர்) நோக்கிப் பயணிக்கிறது. வேதங்கள் பறவை (ராஜாளி)யை ஆன்மாவைக் குறிக்கும் சங்கேதச் சொல்லாக உபயோகிக்கின்றன. பறவை ஸ்வர்கத்தை அடைந்து, அவயவங்களை, சக்திகளை முழுமையாக்கிக் கொண்டு தெய்வீகத்தன்மையுடன் பூமியை அடைகிறது.

R.V. 10.13.1-ல் காணப்படும் ரிக்கை யஜுர்வேதம் 4.1.1. ல் எடுத்து ஆள்கிறது. நாம் ஒவ்வொருவரும் அமரத்துவம் உள்ளுறையும் குழந்தைகளே. பூரணத்வம் அடைவது நம் பிறப்புரிமை என்று இந்த ரிக் அழுத்திச் சொல்கிறது.

**முறை : ப்ரக்ஞான வளர்ச்சி / விழிப்பு அடையச் செய்யும் இந்த உட்பயணத்தின் முக்கிய உபகரணம் என்ன?**

வேத மந்திரங்கள் ஸ்ருஷ்டிக்கும் சக்தி படைத்தவை என்பது வேதத்தின் அடிப்படைக் கொள்கை. பிரபஞ்ச ஸ்ருஷ்டி முழுவதும் மந்திரங்களாலேயே உண்டாகிறது. அதேபோல், பொருளை உணர்ந்து கொண்டு, சொல்ல வேண்டிய முறைப்படி, தகுந்த சந்தத்தில் ஜபிக்கப்படும் ஒவ்வொரு மந்திரத்திலும் ஸ்ருஷ்டி சக்தி உள்ளடங்கி

இருக்கிறது. இதனாலேயே ரிஷிகள் ('உலக நிர்மாணிப்பாளர்' *(லோகக்க்ருத்)* (loka krt. R.V. 9.86.21, 10.133.1) என்று வேதம் சொல்கிறது.

ஜபங்கள் பலவகைப்படும். ரிக்வேதத்தின் மந்திரம் 'ரிக்' எனப்படும். இது காயத்ரி, அனுஷ்டுப் போன்ற சந்தங்களில் அமைந்திருக்கும். மந்திரத்தின் சந்தம் அதில் உள்ள Syllable ஐப் பொறுத்தது. (சந்தம் - metre)

இயந்திரத்தனமாகச் செய்யப்படும் ஜபம் பலனளிக்காது. அக்ஷர சுத்தமாகப் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாவை ஒலி பரப்பும் டேப் ரிகார்டர் தெய்வீகத்தன்மை அடைவதில்லை. நம்பிக்கையுடன், பொருளை உணர்ந்து கொண்டு, ஒரு முனைப்பாட்டுடன் ஜபம் செய்பவனே ஆன்மீகப் பாதையில் முன்னேற்றம் அடைய இயலும். ஜபத்தின் பொழுது மனம் அலை பாய்ந்தால், தவறு நேருகிறது இயல்பே. ரிக்வேதம் வாக்கை ''பரா, பஶ்யந்தி, மத்யமா, வைகரி'' என்று நான்கு வகையாகக் கூறுகிறது. நாம் செவிகளால் கேட்பது 'வைகரி' வாக்கையே. மத்யமாவிலும், அதைத் தாண்டியும் ஜனிக்கும் வாக்கே சக்தி படைத்தது.

**ருத்ர பாராயணம் வேதயோகத்தின் முழுப்பலனையும் பெற ஒரு சாதனம்.**

**7 பிரபாடகங்கள் - சாராம்சம்**

**தீவிர விருப்பமும், உடலைத் தயார் செய்தலும் :**

நம்முடைய பயணத்தை முன் நின்று நடத்துபவன், தெய்வீக மனோசக்தி இச்சையைத் தன்னுள் கொண்ட அக்னிதேவன் (Divine will). முதல் ப்ரபாடகம் இந்த அக்னி தேவனை நம்முள் ஸ்தாபித்து, நிலை நிறுத்துவது பற்றிப் பேசுகிறது.

தூண்டப்பட்ட அக்னியின் சக்தியைத் தாங்க உடலும் மனமும் தயார் செய்யப்பட வேண்டும். இல்லாவில் R.V. 9.83.1-இல் சொன்னபடி பக்குவப்படாத உடல் (அதப்த தனு) ஒரு

ஜாடியைப் போல் உடைந்து போக வாய்ப்புள்ளது. இரண்டாம் ப்ரபாடகம் இந்த அக்னியை ஸ்திரப்படுத்துவதற்குரிய வழியைப் பற்றியது. தூண்டப்பட்ட அக்னி 'ஹம்ஸ'த்துடன் ஒப்பிடப்படுகிறது. 'ஹம்ஸ'த்தின் பொருள் 4.2.16 ல் உள்ள ஹம்ஸ மந்திரத்தில் காண்க.

**ஸூக்ஷ்ம சரீரம் :**

மூன்றாவது, நான்காவது பிரபாடகங்கள் நம் ஸூக்ஷ்ம உடலின் போஷணை பற்றியவை. ஸூக்ஷ்ம சரீரம் நன்கு போஷிக்கப் பட்டு வளராத நிலையில் நம் திறமைகள், செயல்களின் தன்மை முதலியவை கட்டுக்குள் அடங்கி விடுகின்றன. ஏனென்றால் இவற்றை முழுமையாக்கத் தேவையான, தொடர்ந்த ஒரு முனைப்பாடு, நினைவாற்றல், பகுத்தறியும் சக்தி, உள்ளுணர்வு போன்ற மனோ சக்திகள் விரிவடையவில்லை. ஸூக்ஷ்ம சரீரம் வளர்ந்தால் இந்த சக்திகளை வெளிப்படுத்தும் திறனும் அவற்றைத் தன்வயமாக்கும் திறனும் இயல்பாகவே வளர்கின்றன.

இந்த இரு பிரபாடகங்களும், பிரபஞ்ச ஸ்ருஷ்டியின் நோக்கம், நான்கு யுகங்கள், ரிஷிகள், நால்வகை வளங்கள் முதலிய வெவ்வெறு விஷயங்களைப் பற்றிய அறிவூட்டு கின்றன. இங்கு கூறப்படும் நான்கு யுகங்களும், ரிஷிகளும், பிரபல புராணங்களிலிருந்து மாறுபடுகின்றன. இவை 4.3.2., 4.3.3., 4.4.2., 4.4.3. என்ற அனுவாகங்களில் பட்டியலிடப் பட்டுள்ளன. ஸூக்ஷ்ம சரீரத்தின் அபிவிருத்தி, வளர்ச்சி போன்ற விஷயங்கள் இங்கு கூறப்படுவது போல், எந்த மற்றொரு ஆன்மீகப் புத்தகத்திலும் காண இயலாது.

**பௌதருத்ரீயம்**

ஐந்தாவது பிரபாடகம் 'பௌதருத்ரீயம்' அல்லது 'நமகம்' எனப்படும் துதி 'ருத்ரஶிவனை'க் குறித்தது. இந்தத் துதியும் ஜபிப்பவரிடம் ஸூக்ஷ்ம சரீரத்தில் புதிய சக்திகளைத் தோற்றுவிக்கிறது. இவற்றைத் தாங்க உடல் பக்குவப்படுத்தப் பட வேண்டும். இதுவே 6ஆவது பிரபாடகத்தின் நோக்கம்.

### மனிதனிடம் தேவனின் தோற்றம் :

6ஆவது பிரபாடகம் இரு பகுதிகளாலானது. முதல் ஆறு அனுவாகங்களும் பிரபஞ்சத்திலும் நம்முள்ளும் தேவர்களின் தோற்றத்தைப் பற்றியவை. ஸ்ருஷ்டி பற்றிய இரு R.V. ஸூக்தங்கள் (10.81, 10.82) இங்கு கையாளப்படுகின்றன. மற்ற விபரங்கள் புத்தகத்தில் காண்க.

### முழுமையான பூரணத்துவம் :

ஐந்தாவது பிரபாடகத்தில் உள்ள ருத்ர ஜபம் செய்து, 6வது பிரபாடகத்தில் உள்ள யஜுஸ்களால் சூட்சும உடலையும் ஜீவ சக்தியையும் உறுதி செய்து கொண்ட பிறகு 4வது காண்டத்தின் குறிக்கோளான ''முழுமையான பூரணத்துவம்'' அடைய நாம் தயாராகிறோம். ப்ரபாடகம் 7-ல் இந்த பூரணத்துவம் இரு நிலைகளில் (Stage) சொல்லப்படுகிறது. முதல் நிலையானது 'வஸோர் தாரா' அல்லது 'சமகம்' எனப்படும் பலவகைப் பட்ட மனோ சக்திகள், உயிர் சக்திகளின் வர்ஷணம். இது முதல் 11 அனுவாகங்களில் விவரிக்கப்படுகிறது.

இந்த அனுவாகங்கள் பலவகையான குணங்கள், சக்திகள் ஆகியவற்றைப் பட்டியலிடுகின்றன. ஒவ்வொரு குணமும் 'ச மே' என்று முடிவதைக் காணலாம். 10 மற்றும் 11 வது அனுவாகங்களில் பிரயோகமாகும் 'யக்ஞேன கல்பதாம்' என்ற சொற்றொடர், இந்த அனுவாகங்களின் அனைத்து யஜுஸ்ஸுக்கும் சேர்வதாகப் பொருள் கொள்ள வேண்டும். ''அந்த குணம், அல்லது சக்தி அல்லது வளம் என்னிடம் தோன்றட்டும். 'என்னிடம் முழுமையடையட்டும்' என்பது பிரார்த்தனை. இதிலிருந்து இங்கு ''யக்ஞம்'' என்பது வெறும் புறச்சடங்கு அல்ல என்பது தெளிவாகிறது.

யக்ஞம் என்னும் சொல்லின் மூலம் (root) 'யஜ்' என்பது. இதற்கு 'பூஜிப்பது, வளர்ப்பது, அளிப்பது' போன்ற பொருட்கள் உண்டு. அந்தர் யாகத்தினால் பிரபஞ்ச சக்திகளான இந்திரன், அக்னி முதலியவர்களின் சக்திகளை நம்மிடம் தோன்றச் செய்கிறோம். அவற்றை வளர்க்கிறோம்.

'அளிப்பது' என்பதும் ஒரு விசேஷச் சொல்லே. நம்மையே, நம்மிடம் உள்ள அனைத்தையும் மனத்தளவில் தேவர்களுக்கு அளிப்பதையே இந்தச் சொல்லால் குறிப்பிடுகிறோம். பிரபஞ்ச சக்திகளுக்கும், நமக்கும் இடையே நடைபெறும் இந்த இடைவிடாத பரிவர்த்தனையால், நம்மை அளித்து தேவ சக்திகளைப் பெறும் இந்த ''யக்ஞத்தால்'' நம் மனோ சக்திகள் (psychological powers) வளர்ந்து நாளடைவில் முழுமையடைகின்றன.

ஏழாவது பிரபாடகத்தின் *12, 13,* அனுவாகங்கள் பூரணத்துவம் அடைவதில் இரண்டாவது நிலை. இவற்றில் வளங்களின் தோற்றம், பலவகையான சக்திகளின் தோற்றமும் பெருக்கமும் விவரிக்கப்படுகின்றன. இந்த முயற்சி பற்பல தேவர்களை நோக்கிச் செய்யப்பட்ட பிரார்த்தனையுடனும் அவர்களுக்கு நன்றி சொல்வதுடனும் முடிவடைகிறது. *(அனுவாகம் 14,15)*

### 1.6 ஶிவ - ப்ரஹ்ம - விஷ்ணு - முத்தேவர்கள்

''புராணங்களில் விவரிக்கப்படும் விஷ்ணு, சிவன் முதலிய தேவர்களின் மஹிமை பிற்காலச் சேர்க்கை. வேதங்களில் இந்த தேவர்கள், இந்திரனையும், அக்னியையும் விடத் தாழ்ந்தவர் களாக, மிகச்சிறிய பங்கு பெற்று விளங்குகிறார்கள்'' என்பது ஐரோப்பிய அறிவாளிகளால் பிரபலமாக்கப்பட்ட ஒரு கருத்து. நம் நாட்டிலும், தற்காலத்தில் 'சிவன்' எனப்படும் தேவனும் அவனுக்கு உரியதாகச் சொல்லப்படும் செயல்களும் திராவிடர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டவை என்று கருதுகிறார்கள். இதை வேத மதத்தில் திராவிட மதத்தின் ஆக்கிரமிப்பு என்று கூறுகிறார்கள். வேதத்தின் கருத்துக்களைத் தவறாகப் புரிந்து கொண்டதே இத் தவறுகளுக்கு அடிப்படைக் காரணம். 'வேதம்' என்பதை சடங்குகள் மாத்திரம் என்று எடுத்துக் கொண்டு அதில் வரும் சில சம்பவங்களைப் பெரிது படுத்தி கதை வடிவமும், அதற்கேற்ற வாறு சடங்குகளும் உண்டாக்கியதனால் வேதத்தின் கருத்துக்கள் முழுவதுமாகத் திரிந்துவிட்டன என்பது ஸ்ரீ அரவிந்தரின் கருத்து.

வேதத்தில் குறிப்பிடப்படும் தேவர்களின் முக்கியத்துவம், அவர்களைக் குறித்த துதிகளின் எண்ணிக்கையாலோ அல்லது அவர்கள் எந்த அளவிற்கு ரிஷிகளின் எண்ணங்களை ஆக்கிர மித்தார்கள் என்பதிலோ இல்லை. அவர்களுடைய செயல்களை வைத்தே முக்கியத்துவத்தை அறியவேண்டும். பெரும்பான்மை யான வேதத்துதிகள் அக்னியையும் இந்திரனையும் குறித்தவை (Agni - Lord of Divine will power; Indra - Lord of Divine Mind). அதனால் அவர்கள் விஷ்ணுவையும் ருத்ரனையும் விட உயர்ந்தவர்கள் என்று பொருளல்ல. நம்முடைய முன்னோர் களின் மனக்கட்டுப்பாட்டிற்கும், ஆன்மவளர்ச்சிக்கும் அக்னி மற்றும் இந்திரனுடைய உதவி அத்தியாவசியமாக இருந்தது. இதனாலேயே அவர்களைப் பற்றிய துதிகளும் அதிகம் உள்ளன. ருத்ரனுடைய குழந்தைகளான மருத்துக்கள் தந்தையைவிடப் பெரியவர்களா என்ன? ஆனால் அவர்களைக் குறித்த துதிகளும் அதிகம் உள்ளன. மற்ற தேவர்களுடன் அவர்கள் இணைத்தும் அதிகம் பேசப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய செயல்கள், வேதத்தின் அடிப்படையான நோக்கத்திற்கு உடனடியாகத் தேவையானவை, மிகவும் அவசியமானவை. விஷ்ணு, ருத்ரன், ப்ரஹ்மணஸ்பதிஎன்று வேதத்தில் குறிப்பிடப் படுபவர்களே, பிற்காலத்தில் புராணங்களில் காணப்படும் விஷ்ணு, சிவன், பிரம்மா ஆகும். இவர்கள் வேதத்தின் செயல்களுக்குத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுத்து இந்திரன், அக்னி முதலிய தேவர்களுக்கு பின்புலமாக இருந்து அவர்களின் செயல்களை முழுமையாக்கினர். அதனால் அவர்கள் பற்றிய துதிகள் அதிகம் காணப்படவில்லை.

**பிரஹ்மா**

அஞ்ஞானமாகிய இருண்ட கடலிலிருந்து ஒரு தெளிவான பிரபஞ்சத்தை வெளிப்படுத்தி, ப்ரக்ஞானம் உள்ள ஜீவன்கள் தங்களுடைய தலையாய குறிக்கோளை நோக்கி விரையச் செய்யும் ப்ரஹ்மணஸ்பதியின் ஸ்ருஷ்டிப் பிரதானமான செய்கையே பிற்காலத்தைய பிரம்மன் என்பவர் ''ஸ்ருஷ்டி கர்த்தா'' என்று சொல்வதற்கு ஹேதுவாக இருந்தது.

*ஶிவ - ருத்ரா*

ப்ரஹ்மணஸ்பதியின் ஜீவன்களை மேல் நோக்கி உந்தும் செயலுக்குத் தேவையான சக்தியை ருத்ரன் அளிக்கிறார். வேதங்களில் இவர் ஸ்வர்கத்தில் உள்ளவர், வலிமையானவர் என்று சொல்லப்படுகிறார். இவர், தன்னுடைய செயலை, பூமியில் ஆரம்பித்து நம்முடைய யக்ஞத்தின் பலனான ஆன்ம வளர்ச்சியை 5 நிலைகளில் அளிக்கிறார். இவர் மிகவும் வலிமை வாய்ந்தவர். இவருடைய சேனைகள் எல்லாவிதமான தீமைகளையும் எதிர்த்து, தீயவர்களையும் எதிரிகளையும் அழிக்கின்றன. குறைகளையும், ஆன்மீகப் பயணத்தில் தடுமாற்றத்தையும் பொறுக்காதவர். தேவர்களில் மிகவும் கடுமையானவர். வேத காலத்து ரிஷிகளின் பயபக்திக்கு உரியவர். புராணங்களில் ஸ்கந்தன் என்று கூறப்படுபவன் வேதங்களில் குமாரன் அல்லது அக்னி ஆகிறான். அவன் பூமியில் இந்த ருத்ர சக்தியின் குழந்தை. ஜீவ சக்திகளான மருத்துக்களும் ருத்ரனின் குழந்தைகளே. அக்னியும் மருத்துக் களும், ஜீவ ச்ருஷ்டிகளின் போராட்டத்தில், அவர்களின் ஒளி உலகை நோக்கிய பயணத்தில் தலைவர்களாக இருந்து உதவி செய்கிறார்கள். இத்தகைய கடுமையான ருத்ரனுக்கு ஒரு கருணையான முகமும் உண்டு. அவர் ஒரு தலை சிறந்த வைத்தியர். எதிர்த்தால் அழிப்பவரான அவர், பணிந்து உதவிக்கு அழைக்கப்பட்டால், தீமைகளையும், இன்னல் களையும் போக்குகிறார். வேதத்தின் ஶிவருத்ரனைப் பற்றிச் சுருக்கமாகச் சொன்னால் அழிப்பவரும் அவரே, மருத்துவரும் அவரே. பயங்கரமானவரும் மங்களகரமானவரும் அவரே. உலகத்தின் தீமைகளை அழிக்கும் எதிரிப்படையின் தலைவரும் அவரே. தலை சிறந்த ஸ்வ தந்திரமும், அமைதியும், ஆனந்தமும் நிரம்பிய யோகியும் அவரே.

**விஷ்ணு**

ஸ்ருஷ்டி செய்யும் ப்ரஹ்மணஸ்பதியின் வாக்கிற்கும், ருத்ரனின் சேனைகளின் செயல்களுக்கும் அடிப்படையில் ஆதாரமாக இருப்பது விஷ்ணுவே. ஆகாயம், வரைமுறை களுக்கு உட்பட்ட ப்ரபஞ்சத்தின் இயக்கம், ஆன்மீக எழுச்சி, அதன் உச்சமான எல்லை முதலியவை இவரில் அடக்கம்.

விஷ்ணுவின் இருப்பிடமான பரமம்பதம் என்பது ஆனந்தமும், ஒளியும் நிறைந்த மூவுலகம். ஞானிகளால் இடையூறின்றி தரிசிக்கப்படும் பரமம்பதத்தின் அடைவே வேதப்பயணத்தின் குறிக்கோள். வேதங்களின் இந்த விஷ்ணு, புராணங்களில் 'நாராயணன்' 'காப்பாற்றுபவர்', 'அன்பின் தலைவராக' உருவெடுக்கிறார்.

## 1.7. கணபதி மந்திரம்

गणानां त्वा गणपतिं हवामहे कविं कवीनामुपमश्रवस्तमम् ।
ज्येष्ठराजं ब्रह्मणां ब्रह्मणस्पत आ नः शृण्वन्नूतिभिः सीद सादनम् ॥

3 1 3 1 1 1
கணானாம் த்வா கணபதிம் ஹவாமஹே கவிம்

1 1 1
கவீனாம் உபமப்ரவஸ்தமம்

2 3 3 1 1
ஜ்யேஷ்ட ராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத

1 4 3 3
ஆ ந: ப்ருண்வன் ஊதிபி: ஸீத ஸாதனம்

R.V.(2.23.1) T.S.(2.3.14.14.)

இதன் மொழி பெயர்ப்பை லகு ந்யாஸக் கடைசியில் காண்க.

## 1.8. த்ரயம்பக மந்திரம்

त्र्यम्बकं यजामहे सुगन्धिं पुष्टिवर्धनम् ।
उर्वारुकमिव बन्धनान्मृत्योर्मुक्षीय मामृतात् ॥ RV (7.59.12)

1 3 1 3 4 1 1 4
த்ரயம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டி வர்தனம்

1 3 4 1 1 1
உர்வாருகமிவ பந்தனான் ம்ருத்யோர் முக்ஷீயமாம்ருதாத்

இதன் மொழிபெயர்ப்பு அத்தியாயம் 3-ல் 3.12 பகுதியில் உள்ளது.

## 2. லகு ந்யாஸம்

### அந்தர்யாகத்தின் அடிப்படைக் கொள்கைகள்

### *2.1. தியானம்*

*1.* अथात्मानं शिवात्मानं श्रीरुद्ररूपं ध्यायेत्॥

2 1 1 3 1 4 1
**அதாத்மானம் ஶிவாத்மானம் ஸ்ரீருத்ரரூபம் த்யாயேத்**

- ஆன்மாவாகவும், ஆனந்த ரஸமாகவும் உள்ள ஸ்ரீருத்ரனின் வடிவத்தைத் தியானம் செய்க.

*2.* शुद्धस्फटिकसंकाशं त्रिनेत्रं पंचवक्त्रकम् ।
गंगाधरं दशभुजं सर्वाभरणभूषितम् ॥

3 4 2 1 1 1 1 1· 1 1 1 1 1
**ஶுத்த ஸ்படிக ஸங்காஶம் த்ரிநேத்ரம் பஞ்சவக்த்ரகம்**

3 3 4 3 4 4 4 1
**கங்காதரம் தஶபுஜம் ஸர்வாபரண பூஷிதம்**

- ஐந்து முகங்களும், முக்கண்களும் உடையவனும், சுத்த ஸ்படிகத்தின் ஒளி-படைத்தவனும், ஸ்வர்கத்தின் சக்தியைத் தாங்குபவனும் (கங்கா) பத்து புஜங்கள் உள்ளவனும் அனைத்து குணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவனும் ஆன (ருத்ரனைத் தியானம் செய்க)

*3.* नीलग्रीवं शशांकांकं नागयज्ञोपवीतिनम् ।
व्याघ्रचर्मोत्तरीयं च वरेण्यमभयप्रदम् ॥

3 1 1 3 1 1
**நீல க்ரீவம் ஶஶாங்காங்கம் நாக யக்ஞோப வீதினம்**

4 1 1 1 1 4 1 3
**வ்யாக்ர சர்மோத்தரீயம்ச வரேண்யம் அபயப்ரதம்**

- அவன் நீல நிறமான கழுத்து, சந்திரகலை, நாக யக்ஞோப வீதம் (ஜீவ சக்திகள் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளுபவன்) புலித்தோலால் ஆன மேலாடை முதலியவை

உடையவன். பூஜிக்கத்தக்கவன். எல்லா பயங்களிலிருந்தும் விடுவிப்பவன்

**4.** कमण्डल्वक्षसूत्राणां धारिणं शूलपाणिनम् ।

1 3 1 4 1
**கமண்டலு அக்ஷஸூத்ராணாம் தாரிணம் ஶூல பாணினம்**

- கமண்டலம் ருத்ராக்ஷ மாலை முதலியவை தரித்தவன். சூலம் ஏந்தியவன்.

**5.** ज्वलन्तं पिंगलजटा शिखामुद्योतधारिणम् ॥

1 1 1 2 3 1 4
**ஜ்வலந்தம் பிங்கள ஜடாஶிகாம் உத்யோத தாரிணம்**

- ஜடா முடியுடன் ஜ்வலிப்பவன்.

**6.** वृषस्कन्धसमारूढं उमादेहार्धधारिणम् ।
अमृतेनाप्लुतं शान्तं दिव्यभोगसमन्वितम् ॥

1 4 4 3 4 4
**வ்ருஷஸ்கந்த ஸமாரூடம் உமா தேஹார்த தாரிணம்**

1 1 1 1 3 4 1
**அம்ருதேனாப்லுதம் ஶாந்தம் திவ்யபோக ஸமன் விதம்**

- தேவி உமாவைத் தன் உடலில் பாதி பாகத்தில் தரித்தவன். வ்ருஷபத்தின் கழுத்தில் அமர்ந்திருப்பவன். (தன் தோள் வலிமையைக் காட்டும் விதத்தில் அமர்ந்திருப்பவன்) அம்ருதமயமானவன். சாந்தஸ்வரூபி. தெய்வீகமான ஆனந்த வெள்ளத்தில் திளைத்திருப்பவன்.

**7.** दिग्देवतासमायुक्तं सुरासुरनमस्कृतम् ।
नित्यं च शाश्वतं शुद्धं ध्रुवमक्षरमव्ययम् ॥

3 3 3 1 1 1 1 1
**திக் தேவதா ஸமா யுக்தம் ஸுரா ஸுர நமஸ் க்ருதம்**

1 1 1 3 4 4
**நித்யம் ச ஶாஸ்வதம் ஶுத்தம் த்ருவம் அக்ஷரம் அவ்யயம்**

- திக் பாலகர்களால் சூழப்பட்டவன். தேவர்களாலும் அஸுரர்களாலும் வணங்கப்படுபவன். அழிவற்றவன். புனித மானவன். எல்லையற்றவன். நிலையானவன். முழுமை யானவன்.

8. सर्वव्यापिनमीशानं रुद्रं वै विश्वरूपिणम् ।
एवं ध्यात्वा द्विजस्सम्यक् ततो यजनमारभेत् ॥

**ஸர்வ வ்யா1பினம் ஈஶானம் ருத்ர3ம் வை விஶ்வ ரூ1பிணம்**

**ஏவம் த்யா4த்1வா த்வி3ஜஸ்ஸம்யக் ததோ ய1ஜ1ன1ம் ஆரபே4த்1**

- ருத்ரன் எல்லாவற்றையும் ஊடுருவி நிற்பவன். அனைவருக்கும் தலைவன். விஶ்வத்தையே உருவாகக் கொண்டவன். பூர்ணமான இந்த தேவனைத் தியானம் செய்து யஜமானன் (த்விஜன்) தன் பூஜையைத் (அந்தர் யாகத்தை) தொடங்குகிறான்.

## 2.2. சூட்சும உடலில் தேவதைகள்

9. अथातो रुद्रस्नानार्चनाभिषेकविधिं व्याख्यास्यामः ।

**அ2தா1தோ ருத்3ரஸ்னானார்1ச்1சன அபி4ஷேக விதி4ம்**

**வ்2யாக்யாஸ்யாம:**

- ருத்ரனைப் பூஜிப்பதற்காக உண்டான ஸ்நானம், சுத்தீகரணம் முதலிய விதிகளை நாம் இப்பொழுது விளக்குகிறோம்.

10. आदित एव तीर्थे स्नात्वा उदेत्य शुचिः प्रयतो
ब्रह्मचारी शुक्लवासा देवाभिमुखः स्थित्वा आत्मनि देवताः स्थापयेत् ॥

**ஆ3தி1த ஏவ தீ1ர்2த்தே ஸ்னாத்1வா உதே3த்1ய ஶுசி1:**

1 1 3 1 1
*ப்ரயதோ ப்ரஹ்மசாரீ ஶுக்ல வாஸா*

3 4 2 2 1 1 3 1 2 1 1
***தேவ அபிமுக: ஸ்தித்வா ஆத்மனி தேவதா: ஸ்தாபயேத்***

*- பூஜகன், மந்திரங்கள் விதித்த வழியில் (ப்ரஹ்மசாரி) தன்னைப் பரிசுத்தமாக்கிக் கொண்டு (உள்ளும் புறமும்) தன் சூட்சும உடலில் எல்லா தேவதைகளையும் ஸ்தாபிக்கிறான்.*

***11.*** प्रजनने ब्रह्मा तिष्ठतु ।

1 3 1 2 1
***ப்ரஜனனே ப்ரஹ்மா திஷ்டது***

*- ஜனனேந்திரியத்தில் (ஆதாரஸ்தானத்தில்) ப்ரஹ்மாவை*

***12.*** पादयोर्विष्णुस्तिष्ठतु ।

1 1 2 1
***பாதயோ: விஷ்ணு: திஷ்டது***

*- பாதங்களில் விஷ்ணுவை*

***13.*** हस्तयोर्हरस्तिष्ठतु ।

1 1 2 1
***ஹஸ்தயோர் ஹர: திஷ்டது***

*- கரங்களில் ஹரனை*

***14.*** बाह्वोरिन्द्रस्तिष्ठतु ।

3 3 1 2 1
***பாஹ்வோ: இந்த்ர: திஷ்டது***

*- புஜங்களில் இந்திரனை*

***15.*** जठरेऽग्निस्तिष्ठतु ।

2 3 1 2 1
***ஜடரே அக்னி: திஷ்டது***

*- வயிற்றில் அக்னியை*

16. हृदये शिवस्तिष्ठतु ।

3 1 2 1
ஹ்ருதயே ஶிவ: திஷ்டது

- ஹ்ருதயத்தில் ஶிவனை

17. कण्ठे वसवस्तिष्ठन्तु ।

1 2 1 2 1
கண்டே வஸவ: திஷ்டந்து

- கழுத்தில் வஸுக்களை

18. वक्त्रे सरस्वती तिष्ठतु ।

1 2 1 2 1
வக்த்ரே ஸரஸ்வதீ திஷ்டது

- வாயில் ஸரஸ்வதி தேவியை

19. नासिकयोर्वायुस्तिष्ठतु ।

1 1 2 1
நாஸிகயோர் வாயு: திஷ்டது

- மூக்கில் வாயுவை

20. नयनयोश्चन्द्रादित्यौ तिष्ठेताम् ।

1 3 3 1 1 2 1
நயனயோ: சந்த்ராதித்யௌ திஷ்டேதாம்

- கண்களில் சூரிய சந்திரர்களை

21. कर्णयोरश्विनौ तिष्ठेताम् ।

1 1 2 1
கர்ணயோ : அஶ்விநௌ திஷ்டேதாம்

- காதுகளில் அஶ்வினி - தேவர்களை

22. ललाटे रुद्रास्तिष्ठन्तु ।

1 3 1 2 1
லலாடே ருத்ரா: திஷ்டந்து

- நெற்றியில் ருத்ரனை

23. मूर्ध्न्यादित्यास्तिष्ठन्तु ।

4 3 1 1 2 1
மூர்த்னி ஆதித்யா: திஷ்டந்து

- மேல் நெற்றியில் ஆதித்யர்களை

24. शिरसि महादेवस्तिष्ठतु ।

3 1 2 1
ஶிரஸி மஹாதேவ: திஷ்டது

- சிரஸில் மஹாதேவனை

25. शिखायां वामदेवस्तिष्ठतु ।

2 3 1 2 1
ஶிகாயாம் வாமதேவ: திஷ்டது

- சிகையில் வாம தேவனை

26. पृष्ठे पिनाकी तिष्ठतु ।

1 2 1 1 1 2 1
ப்ருஷ்டே பினாகீ திஷ்டது

- பினாகபாணியைப் பின்புறம்

27. पुरतः शूली तिष्ठतु ।

1 1 1 2 1
புரத: ஶூலீ திஷ்டது

- சூலபாணியை முன்புறம்

28. पार्श्वयोः शिवाशंकरौ तिष्ठेताम् ।

1 1 1 2 1
பார்ஶ்வயோ: ஶிவாஶங்கரௌ திஷ்டேதாம்

- இரு பக்கங்களிலும் உமாவையும் சங்கரனையும்

29. सर्वतो वायुस्तिष्ठतु ।

1 1 2 1
ஸர்வதோ வாயு: திஷ்டது

- அனைத்திடங்களிலும் வாயுவை (ஸ்தாபிதமாகட்டும்)

30. ततो बहिः सर्वतोऽग्निर्ज्वालामाला परिवृतस्तिष्ठतु ।

1 1 3 1 3
ததோ பஹி: ஸர்வதோ அக்னிர் ஜ்வாலாமாலா

1 1 1 2 1
பரிவ்ருதஸ்திஷ்டது

- அக்னி ஜ்வாலை நம் உடலின் வெளிப்புறம் அனைத்தையும் சூழ்ந்து கொள்ளட்டும்.

31. सर्वेष्वङ्गेषु सर्वा देवता यथास्थानं तिष्ठन्तु ।

3 3 1 2 2
ஸர்வேஷ ~ அங்கேஷ ~ ஸர்வா தேவதா யதாஸ்தானம்

1 2 1
திஷ்டந்து

- எல்லா தேவர்களும் அவரவர்க்குரிய இடங்களில் சூட்சும உடலில் ஸ்தாபிதமாகட்டும்.

32. माँ रक्षन्तु ॥

1
மாம் ரக்ஷந்து

- அவர்கள் அனைவரும் என்னைக் காப்பாற்றட்டும்.

33. अ॒ग्निर्मे॑ वा॒चि श्रि॒तः । वाग्धृद॑ये । हृद॑यं॒ मयि॑ ।

3 1 1 1 3 3
அக்னிர் மே வாசி ப்ரித: வாக்ஹ்ருதயே ஹ்ருதயம் மயி

- வாக்கில் அக்னியும், ஹ்ருதயத்தில் வாக்கும் என்னில் ஹ்ருதயமும் நிலைபெறட்டும்.

(இனி கூறப்போகும் மந்திரங்கள் மனிதனின் வெவ்வேறு அவயவங்களையும் அவற்றை இயங்கச் செய்யும் ஆதாரச் சக்திகளையும் பட்டியலிடுகிறது. மனிதனின் ஆன்மாவும், பரமாத்மாவும் ஒன்றே. இதனால் 'ஹ்ருதயம் மயி' என்று சொல்லும்போது இங்கு வரும் ஹ்ருதயம் என்னும் சொல், மனிதனின் ஆத்மாவைக் குறிப்பதாக எடுத்துக் கொள்ள வேண்டும். அண்டமும் பிண்டமும் ஒன்றே என்ற தத்துவத்தின் படி அண்டமான ருத்ரனிடம் அமைந்துள்ள சக்திகளே பிண்டமான மனிதனிடமும் பிரதிபலிக்கின்றன என்று நினைவில் கொள்ள வேண்டும்.)

34. अहममृतें । अमृतं ब्रह्मणि ।

**அஹம் அம்ருதே அம்ருதம் ப்ரஹ்மணி**

- நான் அமரத்வத்தில், அமரத்வம் மந்திரத்தில் நிலைத்தவை.

35. वायुर्मे प्राणे श्रितः । प्राणो हृदये । हृदयं मयि ।

**வாயுர் மே ப்ராணே ப்ஶ்ரித: ப்ராணோ ஹ்ருதயே ஹ்ருதயம் மயி**

- என் பிராணனில் வாயுவும், ஹ்ருதயத்தில் ப்ராணனும் என்னில் ஹ்ருதயமும் நிலைபெறட்டும்.

अहममृतें । अमृतं ब्रह्मणि ।

**அஹம் அம்ருதே அம்ருதம் ப்ரஹ்மணி**

- நான் அமரத்வத்தில், அமரத்வம் மந்திரத்தில் நிலைத்தவை

36. सूर्यो मे चक्षुषि श्रितः । चक्षुर्हृदये । हृदयं मयि ।

ஸூர்யோ மே சக்ஷுஷி ப்ஶ்ரித: சக்ஷுர்ஹ்ருதயே

ஹ்ருதயம் மயி

- என் கண்களில் ஸூர்யனும், கண்கள் ஹ்ருதயத்திலும் ஹ்ருதயம் என்னிலும் நிலைபெறட்டும்.

अ॒हम॒मृतं॑ । अ॒मृतं॒ ब्रह्म॑णि ।

அஹம் அம்ருதே அம்ருதம் ப்ரஹ்மணி

- நான் அமரத்வத்தில், அமரத்வம் மந்திரத்தில் நிலைத்தவை.

37.च॒न्द्रमा॑ मे॒ मन॑सि श्रि॒तः । मनो॒ हृद॑ये । हृद॑यं॒ मयि॑ ।

சந்த்ரமா மே மனஸிப்ஶ்ரித: மனோ ஹ்ருதயே ஹ்ருதயம் மயி

- சந்த்ரன் என் மனதிலும், மனம் ஹ்ருதயத்திலும் . ஹ்ருதயம் என்னிலும் நிலைபெறட்டும்.

अ॒हम॒मृतं॑ । अ॒मृतं॒ ब्रह्म॑णि ।

அஹம் அம்ருதே அம்ருதம் ப்ரஹ்மணி

- நான் அமரத்வத்தில், அமரத்வம் மந்திரத்தில் நிலைத்தவை.

38.दिशो॑ मे॒ श्रोत्रे॑ श्रि॒ताः । श्रोत्र॒ग्ं॒ हृद॑ये । हृद॑यं॒ मयि॑ ।

திஶோ மே ப்ஶ்ரோத்ரே ப்ஶ்ரிதா: ப்ஶ்ரோத்ரம்

ஹ்ருதயே ஹ்ருதயம் மயி

- திசைகள் (ஆகாயம்) என் காதுகளிலும், காதுகள் ஹ்ருதயத்திலும், ஹ்ருதயம் என்னிலும் நிலைபெறட்டும்.

अ॒हम॒मृतं॑ । अ॒मृतं॒ ब्रह्म॑णि ।

அஹம் அம்ருதே அம்ருதம் ப்ரஹ்மணி

- நான் அமரத்வத்தில், அமரத்வம் மந்திரத்தில் நிலைத்தவை.

39.आपों मे रेतसि श्रिताः । रेतो हृदये । हृदयं मयि ।

**ஆபோ மே ரேதஸி ப்ரிதா: ரேதோ ஹ்ருதயே**

**ஹ்ருதயம் மயி**

- தெய்வீக சக்திகள் ரேதஸ்ஸிலும், ரேதஸ் ஹ்ருதயத்திலும்

अहममृतें । अमृतं ब्रह्मणि ।

**அஹம் அம்ருதே அம்ருதம் ப்ரஹ்மணி**

- நான் அமரத்வத்தில், அமரத்வம் மந்திரத்தில் நிலைத்தவை.

40.पृथिवी मे शरीरे श्रिता । शरीरं हृदये । हृदयं मयि ।

**ப்ருதிவீ மே பரீரே ப்ரிதா பரீரம் ஹ்ருதயே ஹ்ருதயம் மயி**

- பூமி என் உடலிலும் என் உடல் ஹ்ருதயத்திலும் ஹ்ருதயம் என்னிலும் நிலைபெறட்டும்.

अहममृतें । अमृतं ब्रह्मणि ।

**அஹம் அம்ருதே அம்ருதம் ப்ரஹ்மணி**

- நான் அமரத்வத்தில், அமரத்வம் மந்திரத்தில் நிலைத்தவை.

41.ओषधिवनस्पतयों मे लोमसु श्रिताः । लोमानि हृदये । हृदयं मयि ।

**ஓஷதி வனஸ்பதயோ மே லோமஸு ப்ரிதா:**

**லோமானி ஹ்ருதயே ஹ்ருதயம் மயி**

- பூமியின் ரஸமான ஓஷதிகளும் ஆன்மாவின் ரஸமான ஆனந்தமும் என் ஸிகையில், என் ஸிகை ஹ்ருதயத்தில், ஹ்ருதயம் என்னிலும் நிலைபெறட்டும்.

अ॒ह॒म॒मृतें । अ॒मृतं॒ ब्रह्मणि ।

**அஹம் அம்ருதே அம்ருதம் ப்ரஹ்மணி**

- நான் அமரத்வத்தில், அமரத்வம் மந்திரத்தில் நிலைத்தவை.

42.इन्द्रों मे॒ बलें श्रि॒तः । बल॒गं॒ हृदये । हृदयं॒ मयिं ।

**இந்த்³ரோ மே பலே ஶ்ரித: ப³லம் ஹ்ருத³³யே**

- இந்திரன் என் பலத்திலும், பலம் ஹ்ருதயத்திலும் ...

अ॒ह॒म॒मृतें । अ॒मृतं॒ ब्रह्मणि ।

**அஹம் அம்ருதே அம்ருதம் ப்ரஹ்மணி**

- நான் அமரத்வத்தில், அமரத்வம் மந்திரத்தில் நிலைத்தவை.

43.पर्जन्यों मे मू॒र्ध्नि श्रि॒तः । मू॒र्धा हृदये । हृदयं॒ मयिं ।

**ப¹ர்ஜன்யோ மே மூர்⁴த்னி ஶ்ரித:¹ மூர்⁴தா ஹ்ருத³யே**

**ஹ்ருத³யம் மயி**

- மழை என் சிரஸ்ஸிலும், சிரஸ் என் ஹ்ருதயத்திலும், ஹ்ருதயம் என்னிலும் நிலைபெறட்டும்.

अ॒ह॒म॒मृतें । अ॒मृतं॒ ब्रह्मणि ।

**அஹம் அம்ருதே அம்ருதம் ப்ரஹ்மணி**

- நான் அமரத்வத்தில், அமரத்வம் மந்திரத்தில் நிலைத்தவை.

44.ईशानो में म॒न्यौ श्रि॒तः । म॒न्यु॒र्हृदये । हृदयं॒ मयिं ।

**ஈஶானோ மே மன்யௌஶ்ரித:¹ மன்யுர் ஹ்ருத³யே**

**ஹ்ருத³யம் மயி**

- ஈசானன் என் கோபத்தின் சக்தியிலும் (மன்யுவிலும்) மன்யு என் ஹ்ருதயத்திலும், ஹ்ருதயம் என்னிலும் நிலை பெறட்டும்.

अहममृतें । अमृतं ब्रह्मणि ।

**அஹம் அம்ருதே அம்ருதம் ப்ரஹ்மணி**

- நான் அமரத்வத்தில், அமரத்வம் மந்திரத்தில் நிலைத்தவை.

45. आत्मा मं आत्मनिं श्रितः । आत्मा हृदंये । हृदंयं मयिं ।

1 1 1 1 3

**ஆத்மா ம ஆத்மனிஶ்ரித: ஆத்மா ஹ்ருதயே**

3

**ஹ்ருதயம் மயி**

- ஆத்மா ஆத்மாவிடத்திலும், ஆத்மா என் ஹ்ருதயத்திலும், ஹ்ருதயம் என்னிலும் நிலைபெறட்டும்.

अहममृतें । अमृतं ब्रह्मणि ।

**அஹம் அம்ருதே அம்ருதம் ப்ரஹ்மணி**

- நான் அமரத்வத்தில், அமரத்வம் மந்திரத்தில் நிலைத்தவை.

46. पुनंर्म आत्मा पुनरायुरागांत् ।

1 1 1 3 1

**புனர்ம ஆத்மா புனர் ஆயுராகாத்**

- என் ஆத்மா புனிதமாக்கப்பட்ட பின் திரும்பி வரட்டும். என் ஜீவன் புனிதமாக்கப்பட்ட பின் திரும்பி வரட்டும்.

47. पुनंः प्राणः पुनराकूतमागांत्

1 1 1 1 1 3 1

**புன: ப்ராண: புனர் ஆகூதம் ஆகாத்**

- என் ப்ராணன் புனிதமாக்கப்பட்ட பின் திரும்பி

வரட்டும். என் தீவிர விருப்பம் (aspiration) புனிதமாக்கப் பட்ட பின் திரும்பி வரட்டும்.

48. वैश्वानरो रश्मिभिर्वावृधानः ।

4 4
***வைய்ஸ்வானரோ ரய்ஸ்மிபிர் வாவ்ருதான:***

- தெய்வீக ஜீவசக்தியாகிற வைய்ஸ்வானரன், அறிவுச் சுடர்களை விரும்பட்டும்.

49. अन्तस्तिष्ठत्वमृतस्य गोपाः

1 1 2 1 1 3 1
***அந்தஸ்திஷ்டது அம்ருதஸ்ய கோபா:***

- அம்ருதத்வத்தின் சுடரைப் பாதுகாவல் செய்பவன் உள்ளே அமர்ந்திருக்கிறான்.

50. अस्य श्री रुद्राध्यायप्रश्नमहामन्त्रस्य अघोर ऋषिः

1 1 4 1 4
***அஸ்ய ஸ்ரீருத்ராத்யாய ப்ரய்ஸ்ன மஹா மந்த்ரஸ்ய அகோர ருஷி:***

- இந்த மஹாமந்த்ரமான ருத்ர அத்யாயத்தின் ரிஷி அகோரர் (கண்வர்)

51. अनुष्टुप्छन्दः संकर्षणमूर्तिस्वरूपो

योऽसावादित्यः परमपुरुषः स एष रुद्रो देवता ।

1 1 2 3 1 1 1 1
***அனுஷ்டுப் சந்த: ஸங்கர்ஷண மூர்த்தி ஸ்வரூபோ***

3 1
***யோ அஸௌ ஆதித்ய: பரம புருஷ: ஸஏஷ***

3 3 1
***ருத்ரோ தேவதா***

- அனுஷ்டுப் சந்தம், ஸங்கர்ஷண ஸ்வரூபம். பரம புருஷனும் ஆதித்யனும் ருத்ரனும் ஒன்றே. அந்த ருத்ரனே இந்த அத்யாயத்தின் தேவன்.

52. नमः शिवायेति बीजम् ।

1 3
**நம: ஶிவாயேதி பீஜம்**

- ''நம: ஶிவாய'' என்பது மூலம்

53. शिवतरायेति शक्तिः ।

1 1 1 1
**ஶிவதராயேதி ஶக்தி:**

- 'ஶிவதராய' என்பது சக்தி

54. महादेवायेति कीलकम् ।

3 1 1 1
**மஹா தேவாய இதி கீலகம்**

- மஹா தேவாய என்பது கீலகம்

55. श्रीसाम्बसदाशिवप्रसादसिद्ध्यर्थे जपे विनियोगः ॥

3 3 1 3 3 2 1 3
**ஶ்ரீஸாம்ப ஸதா ஶிவ ப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே விநியோக:**

- ஶ்ரீஸாம்ப ஸதாஶிவ ப்ரஸாதம் அடைவதற்காக ஜபம் அர்ப்பணமாகச் செய்யப்படுகிறது.

56. ओं अग्निहोत्रात्मने अङ्गुष्ठाभ्यां नमः ।

3 1 1 3 2 4
**ஓம் அக்னிஹோத்ராத்மனே அங்குஷ்டாப்யாம் நம:**

- அக்னிஹோத்ரத்தின் ஆத்மாவான கட்டை விரல்களுக்கு நமஸ்காரம்

57. दर्शपूर्णमासात्मने तर्जनीभ्यां नमः ।

3 1 1 1 4
**தர்ஶ பூர்ண மாஸாத்மனே தர்ஜனீப்யாம் நம:**

- தர்ஶ பூர்ண மாஸத்தின் ஆத்மாவாகிய ஆட்காட்டி விரல்களுக்கு நமஸ்காரம்.

58. चातुर्मास्यात्मने मध्यमाभ्यां नमः ।

1 1 1 4 4
***சாதுர் மாஸ்யாத்மனே மத்யமாப்யாம் நம:***

- சாதுர் மாஸ்யத்தின் ஆத்மாவான நடு விரல்களுக்கு நமஸ்காரம்.

59. निरूढपशुबन्धात्मने अनामिकाभ्यां नमः ।

4 1 3 4 1 1 4
***நிரூட பஶுபந்தாத்மனே அனாமிகாப்யாம் நம:***

- அர்ப்பணிப்பதற்காகக் கட்டப்பட்ட பசுவின் ஆத்மா வான உள்ள மோதிர விரல்களுக்கு நமஸ்காரம்.

60. ज्योतिष्टोमात्मने कनिष्ठिकाभ्यां नमः ।

1 1 1 1 2 4
***ஜ்யோதிஷ்டோமாத்மனே கனிஷ்டிகாப்யாம் நம:***

- ஜ்யோதிஷ்டோமத்தின் ஆத்மாவான சுண்டுவிரல்களுக்கு நமஸ்காரம்.

61. सर्वक्रत्वात्मने करतलकरपृष्ठाभ्यां नमः ॥

1 1 1 1 1 1 1 2 4
***ஸர்வக்ரத்வாத்மனே கரதலகரப்ருஷ்டாப்யாம் நம:***

- எல்லாச் செயல்களையும் புரியும் ஆன்மாவில் உறையும் உள்ளங்கைகளுக்கும் கரங்களின் பின்புறத்திற்கும் நமஸ்காரம்.

62. अग्निहोत्रात्मने हृदयाय नमः ।

1 1 1 3
***அக்னி ஹோத்ராத்மனே ஹ்ருதயாய நம:***

- அக்னிஹோத்ரம் என்னும் சடங்கில் உறையும் ஹ்ருதயத்திற்கு நமஸ்காரம்.

63. दर्शपूर्णमासात्मने शिरसे स्वाहा ।

1
***தர்ஶ பூர்ண மாஸாத்மனே ஶிரஸே ஸ்வாஹா***

- தர்ஶ பூர்ண மாஸம் என்னும் சடங்கின் ஆத்மாவில் உறையும் சிரஸ்ஸிற்கு ஸ்வாஹா.

**64.** चातुर्मास्यात्मने शिखायै वषट् ।

1 1 1 2 1
***சாதுர் மாஸ்யாத்மனே ஶிகாயைவஷட்***

- சாதுர் மாஸ்யம் என்னும் சடங்கின் ஆத்மாவில் உறையும் சிகைக்கு வஷட்.

**65.** निरूढपशुबन्धात्मने कवचाय हुं ।

4 1 3 4 1 1 1
***நிரூட பஶு॒பந்தாத்மனே கவசாய ஹு॒ம்***

- யாகத்தில் கட்டப்பட்டிருக்கும் பசுவின் ஆன்மாவில் உறையும் கவசத்திற்கு ஹும்.

**66.** ज्योतिष्टोमात्मने नेत्रत्रयाय वौषट् ।

1 1 1 1 1 1
***ஜ்யோதிஷ்டோமாத்மனே நேத்ரத்ரயாய வௌஷட்***

- ஜ்யோதிஷ்டோமத்தின் ஆன்மாவில் உறையும் கண்களின் பாதுகாவலனுக்கு வௌஷட்.

**67.** सर्वक्रत्वात्मने अस्त्राय फट् ।

1 1 1 2 1
***ஸர்வக்ரத்வாத்மனே அஸ்த்ராய பட்***

- எல்லாச்செயல்களையும் புரிபவனின் உடலில் உள்ள அஸ்த்ரத்திற்கு பட்.

**68.** भूर्भुवस्सुवरोमिति दिग्बन्धः ॥

4 4 1 3 3 3 4
***பூர் புவ ஸ்ஸு॒வரோம் இதி திக் பந்த:***

'பூர் புவ: ஸு॒வ': என்பதனால் எல்லாத் திசைகளும் நன்கு பலப்படுத்தப்பட்டன/பாதுகாக்கப்பட்டன.

## 2.3. தியானம்

आपाताळ नभः स्थलान्त भुवन ब्रह्माण्डमाविस्फुरज्ज्योतिः
स्फाटिक लिङ्ग मौळि विलसत्पूर्णेन्दुवान्तामृतैः ।
अस्तोकाप्लुतमेकमीशमनिशं रुद्रानुवाकाञ्जपन्
ध्यायेदीप्सितसिद्धये ध्रुवपदं विप्रोऽभिषिञ्चेच्छिवम् ॥

1 1 4 2 1 4 3 3
***ஆபாதாள நப: ஸ்தலாந்த புவன ப்ரஹ்மாண்டம்***

2 1 1 2 1 1 3
***ஆவிஸ்புரத் ஜ்யோதி: ஸ்பாடிகலிங்க மௌளி***

1 1 3 1 1
***விலஸத் பூர்ணேந்து வாந்தாம்ருதை:***

1 1 1 1 1
***அஸ்தோகா ப்லுதம் ஏகம் ஈஶம் அனிஶம்***

3 1 1 4 1 1 3 4
***ருத்ரானுவாகான் ஜபன் த்யாயேத் ஈப்ஸிதஸித்தயே***

4 1 3 1 4 1 1
***த்ருவபதம் விப்ரோ அபிஷிஞ்சேத் ஶிவம்.***

*- கீழுலகிலிருந்து, ஸ்வர்கம் வரை அனைத்தையும் சூழ்ந்திருப்பவனும் லிங்கத்தின் சுத்த ஸ்படிக ஒளியுடன் பிரகாசிப்பவனும், ஜடாமுடி, சந்திரன் இவற்றுடன் விளங்கு பவனும், அம்ருதத்வம் உடையவனும், இணையற்றவனும், ஈசனும், (அஞ்ஞானம் என்னும்) இருளற்றவனும், சிறுமை சிறிதும் அற்றவனும், அனைத்தையும் வியாபிப்பவனும், நிலையானவனும் ஆன ருத்ரனை, அவனைப் பற்றிய மந்தி ரங்களை ஜபித்துக் கொண்டு ஞானிகள் தியானிக்கிறார்கள். தன் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள ஞானி அவனுக்கு அபிஷேகம் செய்கிறான்.*

ब्रह्माण्डव्याप्तदेहा भसितहिमरुचा भासमाना भुजङ्गैः
कण्ठे कालाः कपर्दाकलित शशिकलाश्चण्डकोदण्डहस्ताः ।
त्र्यक्षा रुद्राक्षमालाः प्रकटितविभवाः शाम्भवा मूर्तिभेदा रुद्राः

श्रीरुद्रसूक्तप्रकटितविभवा नः प्रयच्छन्तु सौख्यम् ॥

3 3 1 1 3 4 1 1
ப்ரஹ்மாண்ட வ்யாப்ததேஹா பஸித ஹிமருசா

4 4 3 1 2 1 1 1 3 1 1
பாஸமானா புஜங்கை: கண்டே காலா: கபர்தாகலித

1 1 3 1 3 3 1
ஶஶிகலா: சண்ட கோதண்ட ஹஸ்தா:

1 3 1 1 1 4
த்ரயக்ஷா ருத்ராக்ஷமாலா: ப்ரகடித விபவா:

4 1 4 3 3 3 1 1
ஶாம்பவா மூர்த்தி பேதா ருத்ரா: ஶ்ரீ ருத்ர ஸூக்த

1 1 1 1 4 1 1 2 1 2
ப்ரகடித விபவா ந: ப்ரயச்சந்து ஸௌக்யம்

- ப்ரஹ்மாண்டம் முழுவதையும் சூழ்ந்திருப்பவனும், பனி போல் வெண்மையான காந்தி உள்ளவனும், பிறைச் சந்திரன் அலங்கரிக்கும் ஜடாமுடி தரித்தவனும், விஷம் தங்கிய கழுத்துடையவனும், திரிசூலம் தரித்தவனும், முக்கண்ணனும், ருத்ராக்ஷ மாலையோடு விளங்குபவனும், நிம்மதி அளிப்பவனும், வரையறுக்கக்கூடிய உருவமற்றவனும் ஆகிய ருத்ரனைப் புகழ்வோம். இந்தப் புகழ்ச்சி வளங்களைப் பிரகடனப்படுத்தி மகிழ்வளிப்பதாக ஆகட்டும்.

**கணபதி மந்திரம் :**

ग॒णानां᳚ त्वा ग॒णप॑तिं हवामहे क॒विं क॑वी॒नामु॑प॒मश्र॑वस्तमम् ।
ज्ये॒ष्ठ॒रा॒जं॒ ब्रह्म॑णां ब्रह्मणस्पत॒ आ न॑ः शृ॒ण्वन्नू॒तिभि॑ः सीद॒ साद॑नम् ॥
महागणपतये नमः ॥ RV (2.23.1), TS (2.3.14.14)

3 1 3 1 1
கணானாம் த்வா கணபதிம் ஹவாமஹே

1 1 1 1
கவிம் கவீனாம் உபமஶ்ர வஸ்தமம்

2 3 3 1 1

**ஜ்யேஷ்ட ராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத**

1 4 3 3

**ஆ ந: ப்ருண்வன் ஊதிபி: ஸீத ஸாதனம்**

**மஹா கணபதயே நம:** (R.V.2.23.1) (T.S.S2.314.14)

- மந்திரத் தொகுப்புகளின் தலைவனான உன்னை அழைக் கிறோம்.

கவிகளில் தலை சிறந்த கவியும், தெய்வீகமான ஆன்மீக உள் உணர்வை அறிய/கேட்க வைப்பவனும், தலைவனும் மந்திரங்களின் அதிபதியும் ஆன அவன் எங்கள் அழைப்பைக் கேட்டு ஏற்று எங்களிடம் தன் சக்திகளுடன் தோன்றட்டும்.

**மஹா கணபதிக்கு நமஸ்காரம்.**

வேதங்களில் ப்ரஹ்ம, ப்ரஹஸ்பதி, ப்ரஹ்மணஸ்பதி என்ற மூன்றும் ஒரே தேவனையே குறிக்கும். இந்த தேவன், புராணங்களில் பூஜிக்கப்படும், ஓம் என்ற வடிவில் துதிக்கை அமைந்த யானை முகக் கடவுளான பிரசித்தி பெற்ற கணபதியே. தந்த்ர யோகத்தில் கணபதியாக, பராவாக் எனப் படும் தலையாய பேச்சின் தேவனாக, மனிதனின் சூட்சும உடலில் மூலாதார சக்ரத்தை இருப்பிடமாகக் கொண்டவராகக் காணப்படுகிறார். வேதங்களில் 'ப்ரஹ்ம' என்பது (சக்தியான சொல்) மந்திரத்தைக் குறிக்கும். ப்ரஹ்மணஸ்பதி என்பது மந்திரங்களின் அதிபதி. தக்கமுறைப்படி மந்திரங்கள் ஜபிக்கப் பட்டால், அவை நம் சூட்சும உடலில் புகுந்து, மறைந் திருக்கும் சக்திகளை வெளிப்படுத்திக்கொண்டு வருகின்றன.

இவர் புராணங்களில் 'விக்னேச்வரன்', 'தடைகளுக்கு அதிபதி' எனப்படுகிறார். நம்முடைய முரண்பாடான எண்ணங்கள், விருப்பங்கள் காரணமாக நம் செயல்களில் தடைகள் உண்டாகின்றன. வாழ்வின் அனைத்துப் பிரச்னை களுக்கும் இணக்கமின்மையே காரணம். கணபதி சூட்சும சரீரத்தில் தன் துதிக்கையை சாதுரியமாகப் பயன் படுத்தி தேவையான மந்திரத்தை அதற்கு ஏற்ற இடத்தில் பொருத்துகிறார். அப்பொழுது அந்த மந்திரத்தின் சக்தி

இடையூறு உண்டாவதற்குக் காரணமான முரண்பாட்டை நீக்கி விடுகிறது. இதனாலேயே, கணபதி நம் சூட்சும உடலில் தன் பாதுகாக்கும் சக்தியுடன் தோன்றுகிறான் என்று சொல்லுகிறோம். இதே கருத்து R.V.*1.40.1* லும் காணப்படுகிறது. 'விழித்தெழும் பொருட்டு பிரார்த்திக்கப்படுகிறார்.' இந்த மந்திரம் சடங்குகளின் ஆரம்பத்தில் இன்றளவும் ஜபிக்கப்படுகிறது.

'கண' என்பது கூட்டம் எனப்பொருள்படும். கணபதி என்பது மந்திரங்களின் கூட்டத்தின் தலைவன். அவருடைய சக்தி நம் சூட்சும உடலில் தெய்வீக உணர்வு' உண்டாக்கும் ஒலியை, பேச்சைக் கேட்க வைக்கிறது. இவர் 'சிறந்த கவி' என்றும் கூறப்படுகிறார். கவி என்னும் சொல் சாதாரணமான கவியை மட்டும் குறிப்பிடுபவது அல்ல. எல்லாச் செயல்களுக்கும், அண்டத்திலும், பிண்டத்திலும், ஆதாரமான தூண்டி விடுகிறவரையும் குறிக்கும். அவர் நம் அழைப்பைக் கேட்டால், நமக்காக அவருடைய வேலை உடனேயே துவங்கி விடுகிறது.

**ஶாந்தி மந்திரம்**

SEE SECTION 4.3 IN CHAPTER 4.

**3. நமகம்** (T.S.4.5) **அனுவாகம் 1-12**

**3.1 ருத்ரனை சாந்தப்படுத்தும் துதி**

*3.2.- 3.9.* சிவ ருத்ரனைக் குறித்த சிறப்புப் பெயர்கள் (யஜுஸ் மந்த்ரங்கள்): இதுவும் அடுத்த 7 அனுவாகங்களும் ருத்ரனை 100 சிறப்புப்பெயர்களால் புகழ்ந்து துதிக்கின்றன. அனுவாகம் 3, 4-ம் செயல்கள், குணங்கள், பொருள்கள் இவற்றின் மேல் உள்ள ருத்ரனின் ஆதிக்கத்தைச் சொல்லுகிறது.

*3.10.* சிவ ருத்ரனைக் குறித்த ரிக் மந்திரங்கள்

*3.11.* சிவ ருத்ரனைக் குறித்த ரிக், யஜுர் மந்திரங்கள்

(R.V. 1.114 ம், R.V.2.33 ம்)

*3.12.* பூர்த்தி மந்திரங்கள்

**3.1. தை.ஸ. 4.5.1. - சிவனை சாந்தப்படுத்தும் துதி**

இந்த அனுவாகம் சிவனை சாந்தப்படுத்தும், திருப்திப் படுத்தும் துதியால் ஆனது. நீல ருத்ர உபநிஷத்தைப் பற்றிக் கூறும்பொழுது ஸ்ரீ அரவிந்தர் இந்தத்துதிகள் ஒரு ராஜரிஷிக்கு வெளிப்படுத்தப்பட்டது என்கிறார். ரிஷிக்கு ருத்ரனின் தரிசனம் எந்த உருவத்தில் கிடைத்தது? அதுவரை ஆர்யர்களால் தரிசிக்கப் பட்டிராத கோபமும், அழிக்கும் திறனும் படைத்த ஒரு புதிய உருவத்தில் அவர் ருத்ரனைக் கண்டார். இந்த அமானுஷ்ய தரிசனத்தின் பொருள் பற்றிய கவலையுடன், மக்களையும் ராஜ சபையையும் கூட்டி அழிவைத் தவிர்க்க ருத்ரனுக்கு புகழ்மாலை சூட்டினார்.

(Sri Aurobindo - The upanishads - p 423-424)

இந்த அபிப்பிராயத்தை 'ஶதபத ப்ராமண'மும் உறுதி செய்கிறது. அது இந்த தலைப்பை 'ஶாந்த ருத்ரீயம்' என்று பொருள் கொள்ளுகிறது.

*1.* नमस्ते रुद्र मन्यवं उतो त इषवे नमः ।

**நமஸ்தே ருத்ர மன்யவ உதோ த இஷவே நம:**

- ருத்ர! தார்மீகமான கோபம் உடைய உனக்கு நமஸ்காரம். உன்னுடைய அம்பிற்கும் நமஸ்காரம். (வில் என்பது செயலின் குறிக்கோளையும், அம்பு அந்த செயலின் செயல்பாட்டையும் குறிப்பன) (மன்யு-தார்மீகக் கோபம். மனிதனின் சாதாரணமான கோபத்தை இச்சொல் அறிவிக்க வில்லை. 'மன்யு' என்பது குற்றங்களையும், குறைகளையும், தவறுகளையும் பொறுக்காத ருத்ரனின் சக்தியே. அது எதிரியையும், வீண்பொழுது போக்கும் சோம்பேறிகளையும் ஒன்றுபோல் தண்டிக்கிறது.

ருத்ர - அழுகைக்குக் காரணமான துன்பத்தை நீக்குபவர், வலி உண்டாக்குபவர்)

नमस्ते अस्तु धन्वने । बाहुभ्यामुत ते नमः ॥

1 1 4 3 4 1 1

**நமஸ்தே அஸ்து தன்வனே பாஹு¬ப்யாம் உததே நம:**

- உன்னுடைய வில்லிற்கும் பலமான புஜங்களுக்கும் நமஸ்காரம்.

(வில்-செயலின் குறிக்கோள், அம்பு -வெறும் கருவியே)

2\. या त इषुः शिवतमा शिवं बभूव ते धनुः ।
शिवा शरव्या या तव तया नो रुद्र मृडय ॥

1 1 3 4 1 4

**யாத இஷு: ஶிவதமா ஶிவம் பபூவ தே தனு:**

1 1 3 3

**ஶிவா ஶரவ்யா யா தவ தயா நோ ருத்ர ம்ருடய**

- உன்னுடைய மங்கலமான வில்லினாலும், மிகவும் கருணை வாய்ந்த உன் அம்பினாலும், அனுக்ரஹம் என்னும் அம்புகள் நிறைந்த அம்பறாத்துணியாலும் எங்களை மகிழ்வடையச் செய். (ஸ்ரீ அரவிந்தர்)

(இது நீல ருத்ர உப நிஷத்தின் 7 வது செய்யுள்)
(அடுத்தது 8 வது செய்யுள்)

3. या ते॑ रुद्र शि॒वा त॒नूरघो॒रा ऽपा॑पकाशिनी ।
तया॑ नस्त॒नुवा॒ शंत॑मया॒ गिरि॑शन्ता॒भि चा॑कशीहि ॥

1 3 1 4 1 1 1
**யா தே ருத்ர ஶிவா தனூரகோரா அபாப காஶினீ**

1 1 1
**தயா நஸ் தனுவா ஶந்தமயா**

3 1 4 1 1
**கிரிஶந்த அபி சாகஶீஹி**

- ருத்ர! மலையில் வசிப்பவனே! வெண்மையான, கருணையான, பாபங்களை அழிக்கின்ற, சாந்தம் பொங்கித் ததும்புகின்ற உன் உருவமே என் ஜனங்களுக்குப் பழக்கமானது. உன்னுடைய பயப்படுத்தும் உருவம் அல்ல. (அது எங்களுக்குப் புதியது)

(கிரிஶந்தா - மந்திரத்தில் (gir) இருந்து கொண்டு ஆனந்தமளிப்பவன்; மலையில் வசிப்பவன். (BB) எல்லா உரை யாளர்களும் வேதத்தில் கூறப்படும் ருத்ரனை புராணங்களில் காணும் சிவனுடன் இணைக்கிறார்கள். கைலாஸ வாசி, விஷமுண்டதால் நீலகண்டன் என்றெல்லாம் வேத ருத்ரனுடன் ஒன்றுபடுத்துகின்றனர். இவற்றில் பொதிந்துள்ள உண்மைகள் தகுந்த இடங்களில் பின்னால் விளக்கப்படுகின்றன).

4. यामिषुं॑ गिरिशन्त॒ हस्ते॒ बिभ॒र्ष्यस्त॑वे ।
शि॒वां गि॑रित्र॒ तां कु॑रु॒ मा हिꣳ॑सीः पुरु॑षं॒ जग॑त् ॥

3 1 1 3 4 1
**யாமிஷும் கிரிஶந்த ஹஸ்தே பிபர்ஷி அஸ்தவே**

3 1 1 1 3 1
**ஶிவாம் கிரித்ர தாம் குரு மா ஹிம்ஸீ: புருஷம் ஜகத்**

- மலையில் வசிப்பவனே! மலைகளைப் பாதுகாப் போனே! எய்வதற்காக உன் கையில் வைத்திருக்கும் அம்பு எங்களை ஆசீர்வதிப்பதாகட்டும். அது என்னுடைய ஆயுதம் தரித்த சேனையை அழிக்காமலிருக்கட்டும். (மந்திரத்தில் உறைபவனே! அந்த மந்திரத்தைக் காப்பவனே).

5. शि॒वेन॒ वच॑सा त्वा॒ गिरि॒शाच्छा॑ वदामसि ।
यथा॑ न॒: सर्व॒मिज्जग॑दय॒क्ष्मꣳ सु॒मना॒ अस॑त् ॥

1 1 3 1 2 3
*ஶிவேன வசஸா த்வா கிரிஶாச்சா வதாமஸி*

2 1 3 1 1
*யதா ந: ஸர்வம் இத் ஜகத் அயக்ஷ்மம் ஸுமனா அஸத்*

- மலையில் வசிப்பவனே! (மந்திரத்தில் உறைபவனே) நேர்மையான மங்கலமான சொற்களால் நாங்கள் உன்னிடம் நேரிடையாக வணங்கி வேண்டுகிறோம். எங்களிடம் இந்த உலகம் அனைத்தும் எதிரிகளற்றதாகவும் சிநேகமானதாகவும், ஆரோக்கியமான தாகவும் (அயக்ஷ்மம்) இருக்கட்டும்.

6. अध्य॑वोचदधिव॒क्ता प्र॑थ॒मो दैव्यो॑ भि॒षक् ।
अही॑ꣴश्च॒ सर्वा॑न् ज॒म्भय॒न्त्सर्वा॑श्च यातुधा॒न्य॑:॥

4 1 1 4 1 1 1 2 3 4 1
*அத்யவோசத் அதிவக்தா ப்ரதமோ தைவ்யோ பிஷக்*

1 4 1 1 1 4
*அஹீன்ஸ்ச ஸர்வான் ஜம்பயந்த் ஸர்வாஸ்ச யாதுதான்ய:*

- வாக்கை வழி நடத்துபவன், (பயங்களை) குணப்படுத்தும் ப்ரதம தெய்வீக மருத்துவன் எங்களுக்கு அனுகூலமாக அனைத்து எதிரிகளையும் (அந்தர் முகமான மனோரீதியான எதிரிகள்) அழிக்கக் கட்டளை இட்டு விட்டான்.

(அஹி -நாகரூப அசுரன் - இவனால் குறிப்பிடப் படுவது, பேராசை, பொறாமை, அதிகமான காம இச்சை முதலிய உள் எதிரிகளே. பிஷக் - வைத்தியன் - நம்மை பயங்களிலிருந்து விடுவிப்பவன்.)

7. अ॒सौ यस्ता॒म्रो अ॑रु॒ण उ॒त ब॒भ्रुः सु॑म॒ङ्गल॑: ।
ये चे॒माꣳ रु॒द्रा अ॒भितो॑ दि॒क्षु श्रि॒ताः स॑हस्र॒शोऽवैषा॒ꣳ हेड॑ ईमहे ॥

1 1 3 4 3
*அஸௌ யஸ்தாம்ரோ அருண உத பப்ரு: ஸுமங்கல:*

1 3 4 1 3 1
**யே சேமாம் ருத்ரா அபிதோ திக்ஷு ப்ரிதா:**

3
**ஸஹஸ்ரபோ அவை ஷாம் ஹேட ஈமஹே**

- கபில நிறமாயும், தாமிரம் போன்ற சிவந்த நிறமாயும் உள்ள (விடியும்) இளஞ்சூரியன் மங்கலமானவன். அந்த சூரியனும் ஆயிரக்கணக்கான கடூரமான சக்திகளும் ஒருங்கே வெளிப்படுகின்றன. நாங்கள் அவற்றின் கோபத்தைத் தடை செய்ய விரும்புகிறோம்.

(இதில் உள்ள முதல் பகுதி ஆன்ம ஒளியின் விடியலைக் குறிக்கிறது. அந்த ஆன்மீக சூரியன் உதயமாகும் பொழுதே பலவிதமான சக்திகளும் விடுவிக்கப்படுகின்றன. இவற்றை நாம் லட்சியம் செய்வதில்லை. அவைகளின் கோபம் நம்மை பாதிக்காமல் இருக்க வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.)

8. अ॒सौ यो॑ऽव॒सर्प॑ति॒ नील॑ग्रीवो॒ विलो॑हितः ।
उ॒तैनं॑ गो॒पा अ॑दृश॒न्नदृ॑शन्नुदहा॒र्यः॑ ।
उ॒तैनं॒ विश्वा॑ भू॒तानि॒ स दृ॒ष्टो मृ॑डयाति नः ।

1 1 1 3 1
**அஸௌ யோ அவஸர்ப்பதி நீலக்ரீவோ விலோஹித:**

1 3 1 3 3
**உதைனம் கோபா அத்ருபபன் அத்ருபபன் உதஹார்ய:**

1 1 4 1 3 1 3 1
**உதைனம் விப்வா பூதானி ஸத்ருஷ்டோ ம்ருடயாதி ந:**

- நீல ஒளிச்சுடருடன் கூடியவனும் நீலநிறமான கழுத்தை உடையவனும் செந்நிறத்தோனுமான அவனை, இந்த விப்வத்தில் உள்ள ஆன்ம ஒளி பெற்றவரும், தெய்வீக சக்திகள் நிரம்பியவர்களும், தரிசித்தனர். அவன் சீக்கிரமாக மறைந்து விட்டான். தரிசிக்கப்பட்ட ருத்ரன் எங்களிடம் கருணையுடன் இருப்பானாக.

(வாஸர்ப்ப-மறைந்து விடுதல். நீலக்ரீவா - நீல ஒளிச்சுடர் உடையவன் - மறையும் சூரியனின் குணம் - ulraviolet rays).

9. नमो॑ अस्तु॒ नील॑ग्रीवाय सहस्रा॒क्षाय॑ मी॒ढुषे॑ ।
अथो॒ ये अ॑स्य॒ सत्वा॑नो॒ऽहं तेभ्यो॑ऽकरं॒ नम॑: ॥

1 3 4
**நமோ அஸ்து நீலக்ரீவாய ஸஹஸ் ராக்ஷாய மீடுஷே**

2 1 1 4 1
**அதோயே அஸ்ய ஸத்வானோ அஹம் தேப்யோ அகரம் நம:**

*- ஆயிரங்கண்ணுடைய, வள்ளலான, நீலநிறமான கழுத்துடையவனுக்கு நமஸ்காரம். அவனுடைய படைகளுக்கும் என் நமஸ்காரத்தை சமர்ப்பிக்கிறேன்.*

*(நீலக்ரீவா - நீல நிற கழுத்து. அமானுஷீகமாகத் தரிசிக்கப் பட்ட ருத்ரனின் ஒரு பகுதி - நீல நிறமான கழுத்து, ருத்ரனால் உட்கிரகிக்கப்பட்டு, ஒரே இடத்தில் நிலை நிறுத்தப்பட்ட உலகின் விஷங்களைக் குறிக்கிறது. ருத்ரனின் உடலின் ஒவ்வொரு பாகமும் இந்தப் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பகுதியே. சிவன் விஷங்களை ஒரே இடத்தில் வைப்பதன் மூலம் அவை பிரபஞ்சத்தின் மற்ற பகுதிகளுக்குப் பரவாமல் பாதுகாக்கிறார்.)*

10. प्र मु॑ञ्च॒ धन्व॑न॒स्त्वमु॒भयो॒रार्त्नि॑यो॒र्ज्याम् ।
याश्च॑ ते॒ हस्त॒ इष॑व॒: परा॒ ता भ॑गवो वप ॥

1 1 4 1 4 1
**ப்ரமுஞ்ச தன்வனஸ் த்வம் உபயோர் ஆர்த்னியோர் ஜ்யாம்**

1 1 1 1 1 4 3 1
**யாப்ச தே ஹஸ்த இஷவ: பராதா பகவோ வப**

*- பகவன்! வில்லின் நாணை அதன் இருபக்கங் களிலிருந்தும் தளர்த்திவிடு. உன் கையிலுள்ள அம்புகளைக் கீழே போட்டு விடு. (நாணைத் தளர்த்துவதனால் வில் பயனற்றதாகிறது. அவ்வாறு செய்யும்படி பிரார்த்தனை).*

11. अ॒व॒तत्य॒ धनु॒स्त्वꣳ सह॑स्राक्ष॒ शते॑षुधे ।
नि॒शीर्य॑ श॒ल्याना॒ं मुखा॑ शि॒वो न॑: सु॒मना॑ भव ॥

1 1 4 1 1 4
**அவதத்ய தனுஸ்த்வம் ஸஹஸ் ராக்ஷ ஶதேஷுதே**

2 4
நிஶீர்ய ஶல்யானாம் முகா ஶிவோ ந: ஸுமனா பவ

- ஆயிரங்கண்ணுள்ளவனும், நூற்றுக்கணக்கான அம்பறாத் துணியுள்ளவனுமான நீ, உன் வில்லின் நாணை அவிழ்ப் பாயாக. உன் அம்புகளின் கூரிய முனைகளை அழித்து விடுவாயாக. எங்களிடம் நல்மனமுடையவனாகவும் மங்கல மளிப்பவனாகவும் ஆகுவாயாக.

12. विज्यं॒ धनु॑ः कप॒र्दिनो॒ विश॑ल्यो॒ बाण॑वाꣳ उ॒त ।
अने॑शन्न॒स्येष॑व आ॒भुर॑स्य निष॒ङ्गथि॑ः ॥

4 1 1 3 3 1
விஜ்யம் தனு: கபர்தினோ வி ஶல்யோ பாணவான் உத

4 3 2
அனேஶன் அஸ்யேஷவ ஆபுரஸ்ய நிஷங்கதி:

-ஜடாதாரியின் வில்லின் நாண் அவிழ்க்கப்பட்டுவிட்டது. அம்பறாத்துணியில் அம்புகள் இல்லை. அவன் அம்புகள் காணப்படவில்லை. அம்பறாத்துணியும் காலியாக உள்ளது. (கபர்தின் - ஜடாமுடியுடையவன் அல்லது பயம் உண்டாக்கும் உருவினன் - அமானுஷிகமாகக் கண்ட ருத்ரனைப் பற்றியது.)

13. या ते॑ हे॒तिर्मी॑ढुष्टम॒ हस्ते॑ ब॒भूव॑ ते॒ धनु॑ः ।
तया॒ऽस्मान् वि॒श्वत॒स्त्वम॑य॒क्ष्मया॒ परि॑ब्भुज ॥

1 1 4 1 1 3 4 1 4
யாதே ஹேதிர் மீடுஷ்டம ஹஸ்தே பபூவ தே தனு:

1 1 1 1 3 4
தயா அஸ்மான் விஶ்வதஸ் த்வம் அயக்ஷ்மயா பரிப்புஜ

- பெரும் வள்ளலே! (மீடுஷ்டம்) உன் வில்லில், உன்கையில் உள்ள பாணங்களால் எங்களை எல்லா புறங்களிலும் பாதுகாத்து வியாதியிலிருந்து விடுவிப்பாயாக. (அயக்ஷ்ம என்பதால், ருத்ரன் நம்மை வியாதிகள் உண்டாக்கும் மனோரீதியான எதிரிகளிலிருந்து காக்கிறான் என்று தெளிவாகிறது.)

14.नमस्ते अस्त्वायुधायानाततायु धृष्णवे ।
उभाभ्याम् उत ते नमो बाहुभ्यां तव धन्वने ॥

நமஸ்தே அஸ்து ஆயுதாய அனாததாய த்ருஷ்ணவே

உபாப்யாம் உததே நமோ பாஹு¬ப்யாம் தவ தன்வனே

- உன்னுடைய கையில் உள்ள தளர்வாயுள்ள (நாணேற்றப் படாத) அதே சமயம் சக்திவாய்ந்த ஆயுதத்திற்கு நமஸ்காரம். உன்னுடைய கரங்களுக்கும் உன்னுடைய வில்லுக்கும் நமஸ்காரம்.

15.परि ते धन्वनो हेतिरस्मान् वृणक्तु विश्वतः ।
अथो य इषुधिस्तवारे अस्मन्नि धेहि तम् ॥

பரி தே தன்வனோ ஹேதிர் அஸ்மான் வ்ருணக்து விப்வத:

அதோ ய இஷு¬திஸ் தவாரே அஸ்மன் நிதேஹி தம்

--உன்னுடைய வில்லின் அம்பு எங்களை எப்பக்கமும் தொடாமல் செல்லட்டும். உன்னுடைய அம்பறாத்துணியை அவிழ்த்து எங்களிடமிருந்து தூரமாக விலக்கி வை.

### 3.2. பிவருத்ரனின் நாமாவளிகள் ( T.S. 4.5.2.)

**(இதுவும், பின் வரும் 7 அனுவாகங்களும் ருத்ரனுக்கு 100 சிறப்புப் பெயர்களால் புகழ்மாலை சூட்டுகின்றன. வேதத்தின் ஒவ்வொரு தேவனிடமும் அனைத்து தேவர்களின் சக்தியும் உள்ளன. ருத்ரன் இங்கு அனைத்தையும் வியாபித்திருப் பவனாக வர்ணிக்கப்படுகிறான். அவன் சிருஷ்டியின் ஒவ்வொரு பகுதியிலும், அம்சத்திலும் ஊடுருவி இருக்கிறான். அசையும், அசையாப் பொருள்கள், அறிவுள்ளவை, ஜடமானவை இவை எல்லாம் அவனுடைய வெவ்வேறு உருவங்களே ஆகும்.)**

1. नमो॒ हिर॑ण्यबाहवे सेना॒न्यै॑ दि॒शां च॒ पत॑ये॒ नमः॑

3 3 1 1 1

**நமோ ஹிரண்ய பாஹவே ஸேனான்யே திஶாம் ச பதயே நம:**

- ஸ்வர்ணம் போன்ற கரங்களுடைய படைத் தலைவனுக்கும், திசைகளின் நாயகனுக்கும் நமஸ்காரம். (ஹிரண்ய - ஆனந்தத்தை (ரண்) மறைத்து வைத்திருப்பது (ஹி) அநேகமாக ஸ்வர்ணம் என்றே மொழி பெயர்க்கப்படுகிறது. ஹிரண்யம் என்னும் சொல் ஆனந்தத்தை அல்லது மனதிற்கப்பாற்பட்ட ஒளியைக் குறிக்கும். ருத்ரனின் கைகளால் குறிக்கப்பட்ட அவன் பலம் பிரகாசமானது.)

2. नमो॑ वृ॒क्षेभ्यो॒ हरि॑केशेभ्यः पशू॒नां पत॑ये॒ नमः॑

4 1 4 1 1 1

**நமோ வ்ருக்ஷேப்யோ ஹரிகேஶேப்ய: பஶூனாம் பதயே நம:**

- பசுமையான இலைகளால் மூடப்பட்ட வ்ருக்ஷங்களுக்கும் (அல்லது எப்பொழுதும் இளமையாயிருப்பவனுக்கும்) அனைத்து ஜீவன்களின் தலைவனுக்கும் நமஸ்காரம்.

3. नमः॑ स॒स्पिञ्ज॑राय॒ त्विषी॑मते पथी॒नां पत॑ये॒ नमः॑

1 1 1 2 1 1

**நம: ஸஸ்பிஞ்ஜராய த்விஷீமதே பதீனாம் பதயே நம:**

- செல்லும் பாதையில் உள்ள எதிரிகளை அழிப்பவனுக்கும் பிரகாசமானவனுக்கும், மார்கங்களின் தலைவனுக்கும் நமஸ்காரம். (ஸஸ்பி - ஒரு வகைப்பட்ட எதிரிகளின் கூட்டம். பதி - அமரத்வம் அடைவிக்கும் பாதை.)

4. नमो॑ बभ्लु॒शाय॑ विव्या॒धिनेऽन्ना॑नां॒ पत॑ये॒ नमः॑

3 4 4 1 1

**நமோ பப்லுஶாய விவ்யாதினே அன்னானாம் பதயே நம:**

- பழுப்பு நிறமானவனும், ரிஷபாரூடனும், அன்னாதிபதியும் ஆனவனுக்கு நமஸ்காரம்.

(ரிஷப - சக்திகளின் பெருக்கம், அதன் வியாபகம் ஆகியவற்றைக் குறிக்கும். அன்னம் - இந்திரியங்களால் கிரஹிக்கப்படும் அனைத்தும் அன்னமே.)

5. नमो॒ हरि॑केशायोपवी॒तिने॑ पु॒ष्टानां॒ पत॑ये॒ नमः॑

**நமோ ஹரிகேஶாய உபவீதினே புஷ்டானாம் பதயே நம:**

*- எப்பொழுதும் இளமையானவனுக்கும் (காலத்திற்கு அப்பாற்பட்டதால்) தன்னை வெளிப்படுத்திக் கொள் பவனுக்கும் போஷணையின் தலைவனுக்கும் நமஸ்காரம்.*
*(ஹரிகேச - எப்பொழுதும் இளமையானவன்)*
*(புஷ்ட - போஷணைகள் 10 விதப்படும் - பேச்சு, அறிவு, ஆரோக்கியமும் புலன்களின் கூர்மையும், செல்வம், குழந்தை கள், கால்நடைச் செல்வம், வளமான கிராமங்கள் மேன் பாடுடைய தர்மம், எட்டு ஸித்திகள், வீடு ஆகியவை. உப வீத - தன்னை வெளிப்படுத்திக் கொள்ள வந்திருப்பவன்.)*

6. नमो॑ भ॒वस्य॑ हे॒त्यै जग॑तां॒ पत॑ये॒ नमः॑

**நமோ பவஸ்ய ஹேத்யை ஜகதாம் பதயே நம:**

*- பவனின் அம்பிற்கும், இந்த ஜகத்பதிக்கும் நமஸ்காரம்*
*(பவ - ஜீவராசிகள் அனைத்திற்கும் தலைவன்)*

7. नमो॑ रु॒द्राया॑ऽऽतता॒विने॒ क्षेत्रा॑णां॒ पत॑ये॒ नमः॑

**நமோ ருத்ராய ஆத தாவினே க்ஷேத்ராணாம் பதயே நம:**

*- நாணேற்றப்பட்ட வில்லை உடைய ருத்ரனுக்கும் அனைத்து இடங்களின் தலைவனுக்கும் நமஸ்காரம்.*
*(தன் வில்லால் நல் வழியில் செல்பவர்களைக் காக்கின்றார்.)*

8. नमः॑ सू॒तायाह॑न्त्याय॒ वना॑नां॒ पत॑ये॒ नमः॑

**நம: ஸூதாயாஹந்த்யாய வனானாம் பதயே நம:**

*- ரத ஸாரதிக்கும், வெல்ல முடியாதவனுக்கும், ஆனந்த அதிபதிக்கும் நமஸ்காரம்.*
*(ஸூத - ஸாரதி (ஜீவன்களின்), வன - ஆனந்தம்)*

9. नमो रोहिताय स्थपतये वृक्षाणां पतये नमः

1 2 1 1 1 1
**நமோ ரோஹிதாய ஸ்தபதயே வ்ருக்ஷாணாம் பதயே நம:**

- சிவந்த நிறமான தலைவனுக்கும், ஜீவன்களின் அதிபதிக்கும் நமஸ்காரம்

*(ரோஹித - நல்ல வாக்கு (B) அளிப்பவன் (ஹித))*

10. नमो मन्त्रिणे वाणिजाय कक्षाणां पतये नमः

1 1 1 1
**நமோ மந்த்ரிணே வாணிஜாய கக்ஷாணாம் பதயே நம:**

- மந்திரங்களின் நாயகனுக்கும், (விலை மதிப்பற்ற செல்வங்களின்) வியாபாரிக்கும், பிரபஞ்ச ரகசியங்களின் தலைவனுக்கும் நமஸ்காரம்.

*(கக்ஷ - அடைய முடியாத இடம் (ருத்ரன் அங்குள்ள வற்றையும் காக்கிறான்.) - ரகசிய அறிவு - வாணிஜ - (trader) தொலை தூரங்களில் உள்ள பொருள்களை எவ்வாறு வியாபாரி நமக்குக் கிடைக்கச் செய்கிறானோ, அதுபோல் ருத்ரன் பிரபஞ்ச ரகசியங்களை மனிதனுக்கு எளிதில் கிடைக்கச் செய்கிறான். அதனால் வியாபாரி எனப்படுகிறான்)*

11. नमो भुवन्तये वारिवस्कृतायौषधीनां पतये नमः

4 1 1 1 4 1 1
**நமோ புவந்தயே வாரிவஸ்க்ருதாய ஓஷதீனாம் பதயே நம:**

- உலகை விஸ்தரிப்பவனுக்கும், வளங்களை உண்டு செய்பவனுக்கும், ஓஷதிகளின் தலைவனுக்கும் நமஸ்காரம்.

*(வாரி வஸ்க்ருத் - பக்தர்களுக்கு ஸேவை செய்பவன் (BB))*

12. नम उच्चैर्घोषायाऽऽक्रन्दयते पत्तीनां पतये नमः

1 1 4 3 1 1 1 1 1 1
**நம உச்சைர் கோஷாய ஆக்ரந்தயதே பத்தீனாம் பதயே நம:**

- (பக்தர்களின்) உயர்ந்த குரலால் செய்யப்பட்ட புகழ்ச் சொற்களுக்கும் (விரோதிகளின்) கூக்குரலுக்கும், காலாட் படையின் தலைவனுக்கும் நமஸ்காரம்.

*(ஆக்ரந்தயதே - பயமுடன் ஓடும் விரோதிகளின் கூக்குரல்)*

13. नम॑: कृत्स्नवी॒ताय॒ धाव॑ते॒ सत्व॑नां॒ पत॑ये॒ नम॑: ॥२॥

**நம: க்ருத்ஸ்ன வீதாய தாவதே ஸத்வனாம் பதயே நம:**

*- ஸ்ருஷ்டியில் அனைத்துமாயிருப்பவனுக்கும், (பக்தர் களுக்கு உதவ) பெரு விருப்பம் உடையவனுக்கும், நல்லோர்களின் நாயகனுக்கும் நமஸ்காரம்.*
*(தாவதே - பக்தர்களுக்குதவ விரும்புபவன் / பூரணத்வம் அடைய உதவுபவன். வீதயே - தோன்றுதல், மகிழ்தல்)*

**3.3. தை.ஸ. 4.5.3.**

1. नम॒: सह॑मानाय निव्या॒धिन॑ आव्या॒धिनी॑नां॒ पत॑ये॒ नम॑:

**நம: ஸஹமானாய நிவ்யாதின ஆவ்யாதினீனாம் பதயே நம:**

*- பலவானுக்கு, தொடர்ந்து தண்டிப்பவனுக்கு, எதிரி களை அடக்குபவர்களின் தலைவனுக்கு நமஸ்காரம்.*
*(எதிரிகள்-மனோ ரீதியானவர்களாகவும் இருக்கக் கூடும்)*

2. नम॑: ककु॒भाय॑ निष॒ङ्गिणे॑ स्ते॒नानां॒ पत॑ये॒ नम॑:

**நம: ககுபாய நிஷங்கிணே ஸ்தேனானாம் பதயே நம:**

*- ஸ்ரேஷ்டமானவனுக்கு (ககுப - உச்சி) அம்பறாத்துணி தரித்தவனுக்கு (இருதயத்தை) திருடியவர்களின் தலைவனுக்கு நமஸ்காரம்.*
*(ஸ்தேன - திருடன், பக்தர்கள் ருத்ரனின் இருதயத்தைத் அபகரிப்பதால் திருடர்கள். அப்படிப்பட்ட பக்தர்களின் பதி ருத்ரன்)*

3. नमो॑ निष॒ङ्गिण॑ इषुधि॒मते॒ तस्क॑राणां॒ पत॑ये॒ नम॑:

**நமோ நிஷங்கிண இஷுதிமதே தஸ்கராணாம் பதயே நம:**

*- அம்பறாத்துணி தரித்தவனுக்கும், அதற்கு உரிமையாள னுக்கும், கொள்ளையரின் தலைவனுக்கும் நமஸ்காரம்.*

(தஸ்கராணாம் - கொள்ளையர். மேலே சொன்ன 2-ம் யஜுஸ்ஸின் பொருள் இங்கும் பொருந்தும்).

4. नमो॒ वञ्च॑ते परि॒वञ्च॑ते स्ता॒यू॒नां पत॑ये॒ नमः॑

நமோ வஞ்சதே பரிவஞ்சதே ஸ்தாயூனாம் பதயே நம:

- (உன் நினைவில்) உருகி நிற்கும் இதயமுள்ளவர் களுக்கும் முழுவதும்/எல்லையற்ற அந்த பாவத்தினால் கனமானதும் அந்த உணர்ச்சியை, பரவசத்தை வார்த்தைகளால் ஸ்துதிகளால் மூலம் பொழிபவர்க்கும் நமஸ்காரம்.

(வஞ்ச் - vanc - to be moved in heart., feelings issue forth as hymns & prayers)
(ஸ்தாயு - स्तायु to grow dense, increase)

5. नमो॒ निचे॒रवे॑ परिच॒रायार॑ण्याना॒ं पत॑ये॒ नमः॑

நமோ நிசேரவே பரிசராய அரண்யானாம் பதயே நம:

- ஒரே இடத்தில் இருக்காமல் (பக்தர்களின் அழைப்பிற் கிணங்கி) எப்பொழுதும் பயணித்துக் கொண்டே இருக்கும் ருத்ரனுக்கு (பிரபஞ்சத்தை) அனைத்துலகையும் சுற்றி வருபவனான ருத்ரனுக்கு, ஆரண்யங்களின் (ஆனந்தத்தின்) பதிக்கு நமஸ்காரம்.

6. नमः॑ सृका॒विभ्यो॒ जिघा॑ꣳसद्भ्यो मुष्ण॒तां पत॑ये॒ नमः॑

நம: ஸ்ருகாவிப்யோ ஜிகாம் ஸத்ப்யோ முஷ்ணதாம் பதயே நம:

- உச்சமான த்வனியுடன் கூடிய (எதிரிகளை) அழிக்கும் சக்திகளுக்கும் பரவசப்படுத்தும் சக்திகளின் தலைவனுக்கும் நமஸ்காரம். (முஷ்ண - ravish, Captivate)

7. नमो॑ऽसि॒मद्भ्यो॒ नक्तं॒ चर॑द्भ्यः प्रकृ॒न्ताना॒ं पत॑ये॒ नमः॑

நமோ அஸிமத்ப்யோ நக்தம் சரத்ப்ய: ப்ரக்ருந்தானாம்

I I
**பதயே நம:**

- கத்திகள் தரித்தவர்களுக்கும், இரவில் சஞ்சரிப்பவர்களுக்கும், ருத்ரனின் சேவகர்களின் தலைவனுக்கும் நமஸ்காரம்.

8. नमं उष्णीषिणे गिरिचरायं कुलुञ्चानां पतंये नमंः

3 I I I I I
**நம உஷ்ணீஷிணே கிரிசராய குலுஞ்சானாம் பதயே நம:**

- தன் பிரகாசத்தால் மலைகளை ஒளியில் ஆழ்த்தும், (பக்தர்களை) துன்பங்களிலிருந்து (வேரோடு) களைந்து நீக்குபவனுக்கு நமஸ்காரம் (குலுஞ்ச = கு+லுஞ்ச. கு - earth, pluck, லுஞ்ச = pull out )

குறிப்பு :

7 முதல் 17 வரை உள்ள யஜுஸ்ஸுகள் ருத்ரனைப் பின் தொடர்பவர்களைக் குறிக்கின்றன. ருத்ரனை சூழ்ந்திருப்பவர்களும், பின் தொடர்பவர்களும் ருத்ரனின் கணங்களே என்பதை நினைவு கூர்க. அவர்கள் பல விதமாக இருப்பவர்கள். வெவ்வேறு செயல்களில் ஈடுபட்டிருப்பவர்கள். ருத்ரனின் செயல்களில் உதவுபவர்கள். அவர்கள் அனைவருக்கும் வணக்கம் தெரிவிக்கப்படுகிறது.)

9. नम इषुंमद्भ्यो धन्वाविभ्यंश्च वो नमंः

3 4 4 4 1
**நம இஷுமத்ப்யோ தன் வாவிப்யஸ்சவோ நம:**

- அம்புகளைத் தாங்கும் உமக்கும், வில்லாளிகளான உமக்கும் நமஸ்காரம்.

10. नमं आतन्वानेभ्यंः प्रतिदधांनेभ्यश्च वो नमंः

1 4 1 1 3 4 4 1
**நம ஆதன்வானேப்ய: ப்ரதிததானேப்யஸ்ச வோநம:**

- வில்லை நாணேற்றி அம்பை அதில் பொருத்தும் உமக்கு நமஸ்காரம்.

(ஆதன்வான, ப்ரதிததான என்னும் சொற்கள் சிலை வடிக்கும் சிற்பியையும், நரம்பு வாத்தியங்கள் செய்பவரையும் குறிக்கும் சொற்களுமாகும்.)

*11.* नम॑ आ॒यच्छ॑द्भ्यो विसृ॒जद्भ्य॑श्च वो॒ नमः॑

1 2 3 4 3 4 1
**நம ஆயச்சத்ப்யோ விஸ்ருஜத்ப்யஸ்ச வோ நம:**

- வில்லை நாணேற்றி வளைக்கும் உமக்கும், அம்பை விடுவிக்கும் உமக்கும் நமஸ்காரம்.

*12.* नमोऽस्य॑द्भ्यो॒ विध्य॑द्भ्यश्च वो॒ नमः॑

3 4 4 3 4 1
**நமோ அஸ்யத்ப்யோ வித்யத்ப்யஸ்ச வோ நம:**

- வீசி எறியும், துளைக்கும் உமக்கு நமஸ்காரம்.

*13.* नम॒ आसी॑नेभ्य॒ः शया॑नेभ्यश्च वो॒ नमः॑

4 4 1
**நம ஆஸீனேப்ய: ஶயானேப்யஸ்ச வோ நம:**

- அமர்ந்திருக்கும், விழித்திருக்கும் உங்கள் அனைவருக்கும் நமஸ்காரம்.

*14.* नमः॑ स्व॒पद्भ्यो॒ जाग्र॑द्भ्यश्च वो॒ नमः॑

1 3 4 3 3 4 1
**நம ஸ்வபத்ப்யோ ஜாக்ரத்ப்யஸ்ச வோ நம:**

- தூங்கிக் கொண்டிருக்கும், விழித்துக் கொண்டிருக்கும் உங்கள் அனைவருக்கும் நமஸ்காரம்.

*15.* नम॒स्तिष्ठ॑द्भ्यो॒ धाव॑द्भ्यश्च वो॒ नमः॑

1 2 3 4 4 3 4 1
**நம: திஷ்டத்ப்யோ தாவத்ப்யஸ்ச வோ நம:**

- நின்று கொண்டிருக்கும், ஓடிக்கொண்டிருக்கும் உங்கள் அனைவருக்கும் நமஸ்காரம்.

16. नम॑: स॒भाभ्य॑: स॒भाप॑तिभ्यश्च वो॒ नम॑:

4 4 4 | | 4 |
**நம: ஸபாப்ய: ஸபா பதிப்யஸ்ச வோ நம:**

- சபையிலிருப்பவர்க்கும், சபையின் தலைவர்களுக்கும் உங்கள் அனைவருக்கும் நமஸ்காரம்.

17. नमो॒ अश्वे॒भ्योऽश्व॑पतिभ्यश्च वो॒ नम॑: ॥३॥

4 | | 4 |
**நமோ அப்ஸ்வேப்யோ அப்ஸ்வபதிப்யஸ்ச வோ நம:**

- குதிரைகளுக்கும், குதிரைகளின் தலைவனான உங்களுக்கும் நமஸ்காரம்.

**3-4. ருத்ரனுக்குரிய பட்டப்பெயர்கள்** (T.S.4.5.4.)

*(செயல்கள், குணாதிசயங்கள், பொருட்கள் ஆகியவற்றின் மீது ருத்ரனின் ஆதிக்கத்தை காண்கிறோம். ருத்ரனின் படையின், கணங்களின் கூட்டத்தையும் பட்டப் பெயர்கள் குறிக்கின்றன.)*

1. नम॑ आव्या॒धिनी॑भ्यो वि॒विध्य॑न्तीभ्यश्च वो॒ नम॑:

4 4 4 | 4 |
**நம ஆவ்யாதினீப்யோ விவித்யந்தீப்யஸ்ச வோ நம:**

- (எதிரிகளை) பிளக்கும் உனக்கு, வாழ்வின் பற்பல குறிக்கோட்களைக் காட்டுவிக்கும் உனக்கு நமஸ்காரம்.

2. नम॒ उग॑णाभ्यस्तृꣳह॒तीभ्य॑श्च वो॒ नम॑:

3 4 | | 4 |
**நம உகணாப்ய: த்ரும்ஹதீப்யஸ்ச வோ நம:**

- (கூட்டமான) சேனையாக இருக்கும் உனக்கு, (தீயவற்றை) அழிக்கும் சக்தியான உனக்கு நமஸ்காரம்.

3. नमो॑ गृत्सेभ्यो॑ गृत्सप॑तिभ्यश्च वो॒ नम॑:

3 | 4 3 | | | 4 |
**நமோ க்ருத்ஸேப்யோ க்ருத்ஸ பதிப்யஸ்ச வோ நம:**

- விவேகியான உமக்கு, விவேகத்தின் தலைவனான உமக்கு நமஸ்காரம்.

**4. नमो व्रातेभ्यो व्रातपतिभ्यश्च वो नमः**

1 4 1 1 1 4 1
**நமோ வ்ராதேப்யோ வ்ராதபதிப்யஸ்ச வோ நம:**

- பற்பல பாகுபாடுகளுடையவர்களாக இருக்கும் உனக்கு அவர்களின் தலைவனான உனக்கு நமஸ்காரம். (அதர்வவேதத்தில் 'வ்ராத்ய' என்னும் சொல், ஓரிடத்தில் நிலைத் திருக்காத பிரயாணியைக் குறிக்கும். பல்வகையான உணர்வு களையும் (emotions) குறிக்கும்.)

5. नमो गणेभ्यो गणपतिभ्यश्च वो नमः

3 4 3 1 1 4 1
நமோ கணேப்யோ கணபதிப்யஸ்ச வோ நம:

- ருத்ரனின் கணங்களுக்கும் அந்தக் கணங்களின் தலைவர் களுக்கும் நமஸ்காரம்.

6. नमो विरूपेभ्यो विश्वरूपेभ्यश्च वो नमः

1 4 1 4 1
நமோ விரூபேப்யோ விஶ்வரூபேப்யஸ்ச வோ நம:

- அநேக ரூபங்களாயும், விஶ்வரூபமாயும் இருக்கும் உனக்கு நமஸ்காரம்.

7. नमो महद्भ्यः क्षुल्लकेभ्यश्च वो नमः

3 4 1 4 1
நமோ மஹத்ப்ய: க்ஷுல்லகேப்யஸ்ச வோ நம:

- மஹத்தாகவும்,சிறியதாகவும் இருக்கும் உனக்கு நமஸ்காரம்.

8-9. नमो रथिभ्योऽरथेभ्यश्च वो नमः
नमो रथेभ्यो रथपतिभ्यश्च वो नमः

2 4 2 4 1
நமோ ரதிப்யோ அரதேப்யஸ்ச வோ நம:

2 4 2 1 1 4 1
**நமோ ரதேப்யோ ரதபதிப்யஸ்ச வோ நம:**

- ரதமுடைய, ரதமற்ற, ரதத்தில் அமர்ந்துள்ள, ரதங்களின் தலைவர்களான உம் அனைவருக்கும் நமஸ்காரம்.

*10.* नम॒ः सेना॑भ्यः सेना॒निभ्य॑श्च वो॒ नम॑ः

4 4 1
**நம: ஸேனாப்ய: ஸேனானிப்யஸ்ச வோ நம:**

- சேனையில் உள்ள வீரர்களுக்கும் அவர்கள் தலைவர்களுக்கும் நமஸ்காரம்.

*11.* नम॑ः क्ष॒त्तृभ्य॑ः संग्रही॒तृभ्य॑श्च वो॒ नम॑ः

1 4 3 1 4
**நம: க்ஷத்ருப்ய: ஸங்க்ரஹீத்ருப்ய: சவோ நம:**

- ரதஸாரதிகளுக்கும், (குதிரைகளின்) தலைக்கயிற்றைப் பிடித்திருப்பவர்க்கும் நமஸ்காரம்.

*12.* नम॒स्तक्ष॑भ्यो रथका॒रेभ्य॑श्च वो॒ नम॑ः

1 4 2 1 4 1
**நமஸ்தக்ஷப்யோ ரதகாரேப்யஸ்ச வோ நம:**

*13.* नम॒ः कुला॑लेभ्यः क॒र्मारे॑भ्यश्च वो॒ नम॑ः

1 4 1 4 1
**நம: குலாலேப்ய: கர்மாரேப்யஸ்ச வோ நம:**

- தச்சர்களுக்கும், ரதங்கள் செய்பவர்க்கும், குயவர்களுக்கும், கொல்லர்களுக்கும் நமஸ்காரம்.

*14.* नम॑ः पु॒ञ्जिष्टे॑भ्यो निषा॒देभ्य॑श्च वो॒ नम॑ः

1 1 4 3 4 1
**நம: புஞ்ஜிஷ்டேப்யோ நிஷாதேப்யஸ்ச வோ நம:**

- பறவைகளைப் பிடித்து கூண்டுகளில் அடைப்பவர்களுக்கும், மீனவர்களுக்கும் நமஸ்காரம்.

15 नम॑ इषुकृद्भ्यो॑ धन्वकृद्भ्य॑श्च वो॒ नम॑ः

நம இஷுக்ருத்ப்யோ தன்வக்ருத்ப்யஸ்ச வோ நம:

- அம்புகள் செய்பவருக்கும்,வில் தயாரிப்பவருக்கும் நமஸ்காரம்.

16-17. नमो॑ मृगयुभ्य॑ः श्वनिभ्य॑श्च वो॒ नम॑ः
नम॒ः श्वभ्य॒ः श्वप॑तिभ्यश्च वो॒ नम॑ः ॥ ४ ॥

நமோ ம்ருகயுப்ய: ஸ்வனிப்யஸ்ச வோ நம:

நம: ஸ்வப்ய: ஸ்வபதிப்யஸ்ச வோ நம:

- வேடர்களுக்கும், வேட்டை நாய்கள் வளர்ப்பவர்க்கும், நாய்களுக்கும், நாய்களின் உரிமையாளருக்கும் நமஸ்காரம்.

[(ஆனந்தம் உள்ளவர்களைத் தேடிப் பிடிப்பவனுக்கு) வேட்டையாடுபவனுக்கும், ஆனந்தத்தைத் தம்முள் கொண்டவருக்கும் அந்த ஆனந்தத்திற்கும், ஆனந்த வெள்ளத்தின் தலைவனுக்கும் நமஸ்காரம்.

*(ஸ்வ என்பதன் மூலம் ஸூன அல்லது* delight) ]

*3.5.* T.S. 4.5.5.

1. नमो॑ भवाय॑ च रुद्राय॑ च॒
2. नम॑ः शर्वाय॑ च पशुपत॑ये च॒
3. नमो॒ नील॑ग्रीवाय च शिति॒कण्ठा॑य च॒

நமோ பவாயச ருத்ராயச

நம: ஸர்வாய ச பஸூபதயே ச

நமோ நீலக்ரீவாய ச ஸிதி கண்டாய ச

- மங்களமானவனுக்கு, ருத்ரனுக்கு, ஶர்வனுக்கு, பஶுபதிக்கு, நீல நிறமான தொண்டை உடையவனுக்கு வெண்மையான கழுத்தை உடையவனுக்கு (ருத்ரனுக்கு) நமஸ்காரம்.

(பவ - அழிவற்றவன், ஶர்வ - பாபங்களை அழிப்பவன், பஶுபதி - அறிவின் தலைவன், pash என்னும் மூலச்சொல்லில் இருந்து வந்தது. அஞ்ஞானத்தில் உழலும் மனிதர்களின் (பசுக்களின்) தலைவர். ஶிதிகண்ட - ஸூக்ஷ்ம சரீரங்களின் தொகுப்பு).

**4. नमः कपर्दिने च व्युप्तकेशाय च**

1 1 3 1 11 1 1

***நம: கபர்தினே ச வ்யுப்தகேஶாயச***

- ஜடாதாரிக்கும், கேசமே அற்றவனுக்கும் நமஸ்காரம். (ஆழ்ந்த தவம் செய்யும் யோகியர், ஜடாமுடியுடனோ, மழித்த தலையுடனோ இருப்பது வழக்கம்).

**5. नमः सहस्राक्षाय च शतधन्वने च**

1 1 4 1

***நம: ஸஹஸ்ராக்ஷாய ச ஶத தன்வனே ச***

- ஆயிரங்கண்ணுடையவனுக்கும், நூற்றுக்கணக்கில் வில் ஏந்தியவனுக்கும் நமஸ்காரம். (பக்தர்களின் பகைவர்களை கண்கள் கண்டவுடனே, வில்லின் செயற்பாடுத் துவங்க தயார் நிலையில் உள்ளதைக் குறிக்கிறது.)

**6. नमो गिरिशाय च शिपिविष्टाय च**

3 1 1 1 1

***நமோ கிரிஶாய ச ஶிபிவிஷ்டாயச***

- மலைகளில் வசிப்பவனுக்கும், (மந்திர மூர்த்திக்கு) ஞானமே உருவான வனுக்கும் நமஸ்காரம் - (ஶிபி - ஞான ஒளிக்கதிர். ஶிபிவிஷ்ட-ஞான ஒளிக்கதிர்களால் ஊடுருவப் பட்டவன் - அதே உருவானவன்)

7. नमो॑ मी॒ढुष्ट॑माय॒ चेषु॑मते च॒

4 1 1 1 1
நமோ மீடுஷ்டமாய ச இஷுமதே ச

- அளவற்றவளங்கள் படைத்தவனும், அம்பு ஏந்திய வனும் ஆன ருத்ரனுக்கு நமஸ்காரம்.

8. नमो॑ ह्र॒स्वाय॑ च वाम॒नाय॑ च॒

1 1
நமோ ஹ்ரஸ்வாய ச வாமனாய ச

- சிறிய, குள்ளமானவனுக்கு நமஸ்காரம்.
(பரமனை ஹ்ருதயத்தில் வைத்து தியானிக்கும் பொழுது சிறிய உருவமாகத்தானே பார்க்கிறோம்?)
(வாமன - விண்வெளியை அளப்பவன். விஷ்ணுவின் ஒரு சிறப்புப்பெயர், குள்ளன்.)

9. नमो॑ बृह॒ते च॒ वर्षी॑यसे च॒

3 1 1 1
நமோ ப்ருஹதேச வர்ஷீயஸே ச

- ப்ரம்மாண்டமானவனுக்கும், சக்திகளைப் பொழி பவனுக்கும் நமஸ்காரம்.

10. नमो॑ वृ॒द्धाय॑ च सं॒वृध्व॑ने च॒

3 4 1 4 1
நமோ வ்ருத்தாயச ஸம் வ்ருத்வனே ச

- புராதனமானவனுக்கும், அறிவினால் அளப்பரிய புகழ் உடையவனுக்கும் நமஸ்காரம்.

11. नमो॒ अग्रि॑याय च प्रथ॒माय॑ च॒

3 2 1
நமோ அக்ரியாய ச ப்ரதமாய ச

- முதன்மையானவனுக்கும், ப்ரதானமானவனுக்கும் நமஸ் காரம்.

*12.* नमं आशवें चाजिरायं च

1 1
**நம ஆஶவே ச அஜிராயச**

- விரைந்துபரவும் வேகமுடன் செயல்படும் ருத்ரனுக்கு நமஸ்காரம்.

(ஆஶு, அஜிர என்னும் இரு சொற்களும் வேகத்தைக் குறிப்பவை. 'அஜிர' என்பது வேகமாக, நன்றாக செய்யப் படும் செயலைக் குறிப்பதாகும்.)

*13.* नमः शीघ्रियाय च शीभ्याय च

3 1 4 1
**நம: ஶீக்ரியாய ச ஶீப்யாய ச**

- விரைவில் செயல்படும், பெருகும் நீர்போல் நேர்த்தி யுடன் வேகமாக நகரும் ருத்ரனுக்கு நமஸ்காரம்.

*14.* नमं ऊर्म्याय चावस्वन्याय च

1 1
**நம ஊர்ம்யாய ச அவஸ்வன்யாய ச**

- அலைகள் போல் வேகத்துடன் (வெளிப்படு பவனுக்கும்) இருப்பவனுக்கு, கர்ஜிப்பவனுக்கு நமஸ்காரம்.

*15.* नमः स्रोतस्याय च द्वीप्याय च ॥५॥

1 1 3 1 1
**நம: ஸ்ரோதஸ்யாய ச த்வீப்யாய ச**

- அருவிபோல் நளினமுடன் இயங்குபவனுக்கு, தனியிடத்தில் இருப்பவனுக்கு நமஸ்காரம்.

*3.6.* T.S. 4.5.6.

[(1-4) ருத்ரன் எல்லைகள் அற்றவன். காலத்திற்கு அப்பாற்பட்டவன், வயது நிர்ணயம் செய்யப்பட இயலாதவன் என்ற பொருளில் வருகின்றன எனக் கொள்ள வேண்டும்.]

1. नमो॑ ज्ये॒ष्ठाय॑ च कनि॒ष्ठाय॑ च॒

2 1 1 2 1
**நமோ ஜ்யேஷ்டாய ச கனிஷ்டாய ச**

- அனைவரிலும் மூத்தவனுக்கு, அனைவரிலும் இளையவனுக்கு

2. नमः॑ पूर्व॒जाय॑ चापर॒जाय॑ च॒

1 1 1 1
**நம: பூர்வஜாய ச அபரஜாய ச**

- முன் பிறந்தவனுக்கும், பின் பிறந்தவனுக்கும் நமஸ்காரம்

3. नमो॑ मध्य॒माय॑ चापग॒ल्भाय॑ च॒

4 1 1 3 4 1
**நமோ மத்யமாய ச அப கல்பாய ச**

- நடுவனுக்கும், முதிர்ச்சி அடையாதவனுக்கும் நமஸ்காரம்

4. नमो॑ जघ॒न्या॑य च॒ बुध्नि॑याय च॒

4 1 3 4 1
**நமோ ஜகன்யாய ச புத்னியாய ச**

- அனைத்திற்கும் பின்னிருப்பவனுக்கும், ஆதாரமானவனுக்கும் (ஆழத்தில்) நமஸ்காரம்

5. नमः॑ सो॒भ्या॑य च प्रतिस॒र्या॑य च॒

4 1 1 1 1
**நம: ஸோப்யாய ச ப்ரதிஸர்யாய ச**

- ஸோப்யனுக்கும், அனைவரையும் காக்கும் ரக்ஷையாக உள்ளவனுக்கும் நமஸ்காரம்

6. नमो॒ याम्या॑य च॒ क्षेम्या॑य च॒

1 1
**நமோ யாம்யாய ச க்ஷேம்யாய ச**

- அனைவரையும் கட்டுப்படுத்துபவனுக்கு (யம) ஸ்வதந்திரனுக்கு, (சாந்தியுடன் இருப்பவனுக்கு) நமஸ்காரம்

**7. नम॑ उर्व॒र्या॑य च॒ खल्या॑य च॒**

1 2 1

***நம உர்வர்யாய ச கல்யாய ச***

*- நன்கு பண்படுத்தப்பட்ட, பூமியில் உள்ளவனுக்கு நமஸ்காரம்*

*(ருத்ரன் வாஸம் செய்ய வேண்டுமானால் மனமான பூமி நன்கு பண்படுத்தப்பட்ட, களத்து மேடாக இருக்க வேண்டியது அவசியம்).*

**8. नम॒ः श्लोक्या॑य चावसा॒न्या॑य च॒**

1 1 1

***நம: ப்லோக்யாய ச அவஸான்யாய ச***

*- மந்திரங்களில் நிலைத்திருப்பவனுக்கு, (ஆயுட்காலம் முடிவில் ஜீவனைப் பிடியிலிருந்து) தளர்த்துபவனுக்கு நமஸ்காரம்*

*(அவஸான்ய - loosen)*

**9. नमो॒ वन्या॑य च॒ कक्ष्या॑य च॒**

1 1 1

***நமோ வன்யாய ச கக்ஷ்யாய ச***

*- ஆனந்தமானவனுக்கு, ரகசிய இடத்தில் இருப்பவனுக்கு நமஸ்காரம்*

**10. नम॑ः श्र॒वाय॑ च प्रतिश्र॒वाय॑ च॒**

1 1 1 1

***நம: ப்ரவாய ச ப்ரதி ப்ரவாய ச***

*- ஒலி வடிவானவனுக்கு, எதிரொலி ஆனவனுக்கு நமஸ்காரம்*

*(புகழுடையவனுக்கு, ஒலியை விளக்கும் 'வைகரி' ஆனவனுக்கு)*

*11.* नम॑ आ॒शुषे॑णाय चा॒ऽऽशुर॑थाय च॒

1 2 1
**நம ஆஶுஷேணாய ச ஆஶுரதாய ச**

- விரைவான படைத்தலைவனுக்கு, விரைவான ரதமுடையவனுக்கு நமஸ்காரம்

*12.* नमः॒ शूरा॑य चावभिन्द॒ते च॒

1 4 3 1 1
**நம: ஶூராய ச அவபிந்ததே ச**

- வீரனுக்கு, எதிரிகளை அழிப்பவனுக்கு நமஸ்காரம்

*13.* नमो॑ व॒र्मिणे॑ च वरू॒थिने॑ च॒

1 2 1
**நமோ வர்மிணே ச வரூதினே ச**

- மார்புக் கவசத்திற்கும், கவசம் தரித்தவனுக்கும் நமஸ்காரம்

*14.* नमो॑ बि॒ल्मिने॑ च कव॒चिने॑ च॒

3 1 1 1 1
**நமோ பில்மினே ச கவசினே ச**

- தலையில் கவசம் தரித்தவனுக்கும், உடல்மூடிய கவசம் அணிந்தவனுக்கும் நமஸ்காரம்
(ஞான ஒளியுடன் பிரகாசிப்பவனுக்கும், பாதுகாக்கப் பட்டவனுக்கும்) (பில்ம - பிரகாசம், தலைக்கவசம்)

*15.* नमः॑ श्रु॒ताय॑ च श्रुतसे॒नाय॑ च ॥६॥

1 1 1 1
**நம: ஶ்ருதாயச ஶ்ருத ஸேனாய ச**

- ஶ்ருதியை அறிந்தவனுக்கும், அதன் தலைவனுக்கும் நமஸ்காரம்

3.7. T.S. 4.5.7.

*1.* नमो॑ दुन्दु॒भ्या॑य चाऽऽहन॒न्या॑य च॒

3 3 4 1
**நமோ துந்துப்யாய ச ஆஹனன்யாய ச**

- முரசுடன் இருப்பவனுக்கும், முரசறிவப்பவனுக்கும் நமஸ்காரம்

*2.* नमो॑ धृ॒ष्णवे॑ च प्रमृ॒शाय॑ च॒

4 1 1 1
**நமோ த்ருஷ்ணவே ச ப்ரம்ருஶாய ச**

- தைரியசாலிக்கும், எச்சரிக்கையானவனுக்கும் நமஸ் காரம்

*3.* नमो॑ दू॒ताय॑ च॒ प्रहि॑ताय च॒

3 1 1 1 1 1
**நமோ தூதாய ச ப்ரஹிதாய ச**

- தூதனுக்கும், வேலையாளுக்கும் நமஸ்காரம்

*4.* नमो॑ नि॒ष॒ङ्गिणे॑ चेषुधि॒मते॑ च॒

3 1 4 1 1
**நமோ நிஷங்கிணே ச இஷுதிமதே ச**

- அம்பறாத்துணி தரித்தவனுக்கும், அதன் உரிமை யாளனுக்கும் நமஸ்காரம்

*5.* नम॑स्ती॒क्ष्णेष॑वे चाऽऽयु॒धिने॑ च॒

1 1 4 1
**நமஸ்தீக்ஷ்ணேஷவே ச ஆயுதினே ச**

- கூர்மையான அம்பு தரித்தவனுக்கும், ஆயுதம் தரித்த வனுக்கும் நமஸ்காரம்

*6.* नमः॑ स्वायु॒धाय॑ च सु॒धन्व॑ने च॒

4 1 4 1
**நம: ஸ்வாயுதாய ச ஸுதன்வனே ச**

- மங்கலமான த்ரிஶூலதாரிக்கும், பினாக பாணிக்கும் நமஸ்காரம்.

**7. नम॒ः स्रुत्या॑य च॒ पथ्या॑य च॒**

***நம: ஸ்ருத்1யாய ச1 ப1த்2யாய ச1***

- குறுகிய வழிகளிலும், பெரிய பாதைகளிலும் செல்லும் திறமை வாய்ந்தவனுக்கு நமஸ்காரம்.

**8. नम॑ः का॒ट्या॑य च नी॒प्या॑य च॒**

***நம: கா1ட்1யாய ச1 நீப்1யாய ச1***

- சதுப்பு நிலங்களிலும், நீர் நிலைகளிலும் இருப்ப வனுக்கு நமஸ்காரம்.

**9. नम॒ः सूद्या॑य च स॒रस्या॑य च॒**

***நம: ஸூத்3யாய ச1 ஸரஸ்யாய ச1***

- அகழிகளிலும், ஏரிகளிலும் இருப்பவனுக்கு நமஸ்காரம்

**10. नमो॑ ना॒द्याय॑ च वैश॒न्ताय॑ च॒**

***நமோ நாத்3யாய ச1 வைஶந்த1ாய ச1***

- ஸூக்ஷ்ம நாடிகளில் இருப்பவனுக்கு, ஆனந்த வெள்ளத்தில் உறைபவனுக்கு நமஸ்காரம்.

(நாத்யா - ஸூக்ஷ்ம நாடிகளில் வெளிப்படுபவன்)

(வைஶந்த - cup of soma juice)

**11. नम॒ः कूप्या॑य चाव॒ट्या॑य च॒**

***நம: கூ1ப்யாய சா1வட்1யாய ச1***

- தண்ணீர் தொட்டிகளாய், கிணறுகளாய் இருப்பவனுக்கு நமஸ்காரம்.

12. नमो॒ वर्ष्या॑य चाव॒र्ष्याय॑ च॒

நமோ வர்ஷ்யாய ச அவர்ஷ்யாய ச

- மழையாக ஆனவனுக்கு (இருப்பவனுக்கு) மழை நீர் தவிர மற்ற நீராயும் இருப்பவனுக்கு நமஸ்காரம்

13. नमो॑ मे॒घ्या॑य च विद्यु॒त्या॑य च॒

நமோ மேக்யாய ச வித்யுத்யாய ச

- மேகமாய், மின்னலாய் ஆனவனுக்கு நமஸ்காரம்

14. नम॑ ई॒ध्रिया॑य चाऽऽत॒प्या॑य च॒

நம ஈத்ரியாய ச ஆதப்யாய ச

- பனீரென்ற ஆகாயமாய், வெப்பமாய் ஆனவனுக்கு நமஸ்காரம்

15. नमो॒ वात्या॑य च॒ रेष्मि॑याय च॒

நமோ வாத்யாய ச ரேஷ்மியாய ச

- பலத்த காற்றுடன் கூடிய மழையாய், ஆலங்கட்டி கூடிய மழையாய் ஆனவனுக்கு நமஸ்காரம்

16. नमो॑ वास्त॒व्या॑य च वास्तु॒पाय॑ च ॥७॥

நமோ வாஸ்தவ்யாய ச வாஸ்துபாய ச

- பற்பல வாசஸ்தலங்களில் உள்ளவனுக்கு, அவற்றைக் காப்பவனுக்கு நமஸ்காரம்

(மேலே உள்ள நீர் என்னும் சொல், ஏரி நீரானாலும், கிணற்று நீரானாலும் - தெய்வீக சக்திகளையே குறிக்கிறது என்று நினைவில் கொள்க)

*3.8.* T.S. 4.5.8.

*(இந்தப் பகுதியில் பிரபலமான சிவ மந்திரம் உள்ளது)*

*1.* नमः॒ सोमा॑य च रु॒द्राय॑ च॒

**நம: ஸோமாய ச ருத்ராய ச**

- ஸோமனுக்கு, ருத்ரனுக்கு நமஸ்காரம்.

*(ஸோமா-உமையுடன் கூடியவன். ஸ+உமா;*

*ருத்ர - அழுகைக்குக் காரணமான துன்பத்தைப் போக்குபவன்).*

(dra - removes, ru - crying)

*2.* नम॑स्ता॒म्राय॑ चारु॒णाय॑ च॒

**நம: தாம்ராய ச அருணாய ச**

- உதிக்கும் சூரியனின் சிவந்த நிறமானவனுக்கும், உதித்த சூரியனின் கருஞ்சிவப்பு நிறமானவனுக்கும் நமஸ்காரம்.

*3.* नम॑: श॒ङ्गाय॑ च पशु॒पत॑ये च॒

**நம: ஶங்காய ச பஶுபதயே ச**

- நல்வாழ்வு அளிப்பவனுக்கும், பஶுபதிக்கும் நமஸ்காரம்.

*4.* नम॑ उ॒ग्राय॑ च भी॒माय॑ च॒

**நம உக்ராய ச பீமாய ச**

- உக்ரமானவனுக்கும், பயங்கரமானவனுக்கும் நமஸ்காரம்.

*5.* नमो॑ अग्रेव॒धाय॑ च दूरेव॒धाय॑ च॒

**நமோ அக்ரேவதாய ச தூரே வதாய ச**

- முன்னின்றும், தூரத்திலிருந்தும் (எதிரிகளை) அழிப்பவனுக்கு நமஸ்காரம்.

**6.** नमो॑ ह॒न्त्रे च॒ हनी॑यसे च॒

1 1 1
***நமோ ஹந்த்ரே ச ஹனீயஸே ச***

*- (எதிரிகளை) அழிப்பவனுக்கு, அந்தச் செயலில் தலை சிறந்தவனுக்கு நமஸ்காரம்.*

**7.** नमो॑ वृ॒क्षेभ्यो॒ हरि॑केशेभ्यो॒

4 1 4
***நமோ வ்ருக்ஷேப்யோ ஹரிகேஶேப்யோ***

*- பசுமையான கிளைகளால் மூடப்பட்ட வ்ருக்ஷங்களுக்கு நமஸ்காரம். (என்றும் இளைமையானவனுக்கு நமஸ்காரம்)*

*(நம் வாழ்வையும் 'மரம்' என்னும் சொல் சங்கேதமாகக் குறிக்கிறது).* (Refer 3.2.5. in this book)

**8.** नम॑स्ता॒राय॒

1
***நமஸ் தாராய***

*- நம்மை விடுவிப்பவனுக்கு (துன்பங்களிலிருந்து) நமஸ்காரம்*

**9.** नमः॑ श॒म्भवे॑ च मयो॒भवे॑ च॒

4 1 4 1
***நம: ஶம்பவே ச மயோ பவே ச***

*- அமைதியின் மூலஸ்தானத்திற்கு, ஆனந்தத்தின் மூலஸ்தானத்திற்கு நமஸ்காரம்.*

**10.** नमः॑ शङ्क॒राय॑ च मयस्क॒राय॑ च॒

1 1 1 1
***நம: ஶங்கராய ச மயஸ்கராய ச***

*- அமைதியையும், ஆனந்தத்தையும் உண்டு செய்பவனுக்கு நமஸ்காரம்.*

**11.** नमः॑ शि॒वाय॑ च शि॒वत॑राय च॒

நம: ஶிவாய ச ஶிவதராய ச

- மங்கலமானவனுக்கு, பரமாத்மாவிற்கு நமஸ்காரம் (ஐந்தெழுத்து மந்திரமான 'நம: ஶிவாய' என்பதை இங்கு காணலாம்.)

12. नमस्तीर्थ्याय च कूल्याय च

நமஸ்தீர்த்யாய ச கூல்யாய ச

- புண்ணிய நதிகளாக, (நதிகள் - தெய்வீக சக்திகள், கரைகள் - கட்டுப்பாடுடன் செயல்பட ஒரு ஏற்பாடு) அவற்றின் கரைகளாக ஆனவனுக்கு நமஸ்காரம்.

13. नमः पार्याय चावार्याय च

நம: பார்யாய சாவார்யாய ச

- அனைத்துக்கும் அப்பாற்பட்டவனுக்கு நம்முடன் இருப்பவனுக்கு நமஸ்காரம்.

14. नमः प्रतरणाय चोत्तरणाय च

நம: ப்ரதரணாய ச உத்தரணாய ச

- அனைத்தையும் கடந்தவனுக்கு, மறுபடி நம்முடன் உறைபவனுக்கு நமஸ்காரம். (trancendent and immarent)

15. नम आतार्याय चाऽऽलाद्याय च

நம ஆதார்யாய ச ஆலாத்யாய ச

- நம்முடைய அர்ப்பணிப்பில் மகிழ்பவனுக்கு, அதை விரைவில் ஏற்றுக் கொள்ளுபவனுக்கு நமஸ்காரம்.

16. नमः शष्प्याय च फेन्याय च

நம: ஶஷ்ப்யாய ச பேன்யாய ச

- இளந்துளிர்களாய், நுரையாய் ஆனவனுக்கு நமஸ்காரம்.

17. नम॑ः सिक॒त्या॑य च प्रवा॒ह्या॑य च ॥ ८ ॥

1 1 1 1 1
**நம: ஸிகத்யாய ச ப்ர வாஹ்யாய ச**

- மணலிலும், நீரோடைகளிலும் உள்ளவனுக்கு நமஸ்காரம்.

*3.9.* T.S. 4.5.9.

*1.* नम॑ इरि॒ण्या॑य च प्रप॒थ्या॑य च॒

1 1 1 2 1
**நம இரிண்யாய ச ப்ரபத்யாய ச**

- உப்புநீர் நிறைந்த தரிசு நிலங்களில் உள்ளவனுக்கு, பயணிகளின் பாதுகாவலனாக உள்ளவனுக்கு நமஸ்காரம்.

*2.* नम॑ः किꣳशि॒लाय॑ च॒ क्षय॑णाय च॒

1 1 1
**நம: கிம் பபிலாய ச க்ஷயணாய ச**

- கற்பாறையால் ஆன இடங்களிலும், ரகசியமான இடங்களிலும் இருப்பவனுக்கு நமஸ்காரம்.

3. नम॑ः कप॒र्दिने॑ च पुल॒स्तये॑ च॒

1 1 3 1 1 1 1
**நம: கபர்தினே ச புலஸ்தயே ச**

- ஜடாமுடி தரித்தவனுக்கு, அலையலையான அளக பாரம் உடையவனுக்கு நமஸ்காரம்.

4. नमो॒ गोष्ठ्या॑य च॒ गृह्या॑य च॒

3 1 1 3 1
**நமோ கோஷ்ட்யாய ச க்ருஹ்யாய ச**

- ஞான பீடங்களிலும் (மாட்டுக் கொட்டகையிலும்) வீடுகளிலும் உள்ளவனுக்கு நமஸ்காரம்.

5. नम॒स्तल्प्या॑य च॒ गेह्या॑य च॒

1 1 1 3 1
**நம: தல்ப்யாய ச கேஹ்யாய ச**

- ஶயனித்திருப்பவனுக்கு, மாளிகையில் உள்ளவனுக்கு நமஸ்காரம்

6. नमः॑ का॒ट्या॑य च गह्व॒रे॒ष्ठाय॑ च॒

1 1 1 3 2 1
**நம: காட்யாய ச கஹ்வரேஷ்டாய ச**

- புல்வெளியில் அமர்ந்திருப்பவனுக்கு, ஆழமான குகையில் வசிப்பவனுக்கு நமஸ்காரம்

7. नमो॑ ह्रद॒य्या॑य च निवे॒ष्प्या॑य च॒

3 1 1 1
**நமோ ஹ்ருதய்யாய ச நிவேஷ்ப்யாய ச**

- தினசரி வாழ்வில் ஈடுபட்டுள்ளவனுக்கு, பிரம்ம சாரிக்கு நமஸ்காரம்

8. नमः॑ पाꣳस॒व्या॑य च रज॒स्या॑य च॒

1 1 1
**நம: பாம்ஸவ்யாய ச ரஜஸ்யாய ச**

- பூமியிலும், அந்தரிக்ஷத்திலும் உள்ளவனுக்கு நமஸ்காரம்

9. नम॒ः शुष्क्या॑य च हरि॒त्या॑य च॒

1 1 1 1
**நம: ஶுஷ்க்யாய ச ஹரித்யாய ச**

- வறண்ட இடங்களாக, பசுமை நிலங்களாக ஆனவனுக்கு நமஸ்காரம்

10. नमो॒ लोप्या॑य चोल॒प्या॑य च॒

1 1 1
**நமோ லோப்யாய சோலப்யாய ச**

- புதர்களடர்ந்த காடுகளிலும், முரட்டுப்புல் நிறைந்த இடங்களிலும் இருப்பவனுக்கு நமஸ்காரம்.

11. नम॑ ऊ॒र्व्या॑य च सू॒र्म्या॑य च॒

1 1
**நம ஊர்வ்யாய ச ஸூர்ம்யாய ச**

- பூமியில் இருப்பவனுக்கு, தண்ணீர் அலைகள் தெறிக்கும் நதிகளில் இருப்பவனுக்கு நமஸ்காரம்.

12. नमः॑ प॒र्ण्या॑य च पर्णश॒द्या॑य च॒

1 1 1 3 1
**நம: பர்ண்யாய ச பர்ண ஶத்யாய ச**

- பசுமையான இலைகளிலும், சருகுகளிலும் இருப்பவனுக்கு நமஸ்காரம்.

13. नमो॑ऽपगु॒रमा॑णाय चाभिघ्न॒ते च॒

1 3 1 4 4 1 1
**நமோ அபகுரமாணாய சாபிக்னதே ச**

- உயரே தூக்கிய கரங்களுடையவனுக்கு, (எதிரிகளை) விரட்டுபவனுக்கு நமஸ்காரம். (அபகுரமான - threatening pose)

14. नम॑ आक्खिद॒ते च॑ प्रक्खिद॒ते च॒

1 2 3 1 1 1 1 2 3 1 1
**நம ஆக்கிததே ச ப்ரக்கிததேச**

- சிறிதளவில், பெரிய அளவில் பீடிக்கப்பட்டவனுக்கு நமஸ்காரம்.

15. नमो॑ वः किरि॒केभ्यो॑ दे॒वाना॒ꣳ हृद॑येभ्यो॒

1 1 4 3 3 4
**நமோ வ: கிரிகேப்யோ தேவானாம் ஹ்ருதயேப்ய:**

- செல்வத்தைப் பொழிபவர்களுக்கு, தேவர்களின் ஹ்ருதயத்தில் வசிப்பவர்களுக்கு நமஸ்காரம்.

*16.* नमो॑ विक्षीण॒केभ्यो॒

1 4
**நமோ விக்ஷீண கேப்ய :**

- அழிவற்றவருக்கு (வியாதிகளை குணமாக்குபவருக்கு)

*17.* नमो॑ विचिन्व॒त्केभ्यो॒

1 1 1 4
**நமோ விசின்வத்கேப்ய:**

- பகுத்தறிந்து உணர்பவருக்கு

*18.* नम॑ आनिर्ह॒तेभ्यो॒

1 4
**நம ஆனிர்ஹதேப்ய:**

- வெல்ல முடியாதவர்க்கு நமஸ்காரம்

*19.* नम॑ आमीव॒त्केभ्यः॑ ॥ ९ ॥

1 1 4
**நம ஆமீவத் கேப்ய:**

- ஸ்நேக பாவமற்றவருக்கும் நமஸ்காரம்.

**3-10. ஶிவ ருத்ரனைக் குறித்த ரிக் மந்திரங்கள்:**

*(இந்த அனுவாகத்திலுள்ள 12 மந்திரங்களும், காயத்ரி முதலிய சந்தங்களில் அமைந்த ரிக் மந்திரங்கள். ரிக் வேதத்தில் உள்ள அனைத்தும் ரிக் மந்திரங்களே. ஆனால் தற்பொழுது உள்ள ரிக் வேத ஸம்ஹிதாவில் அனைத்து ரிக் மந்திரங்களும் காணப்படவில்லை. இங்கு கூறப்படும் 12 ரிக் மந்திரங்களில் 3 முதல் 9 வரை உள்ளவை ரிக் வேத ஸம்ஹிதாவில் உளளன. மற்றவை பிற பாடமுறையில் அமைந்த 'பாஷ்கல' முதலிய ரிக்வேதத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். அவை நமக்குக் கிடைக்கவில்லை. யஜுர் வேத தை.ஸம்ஹிதையில் இந்த எல்லா ரிக் மந்திரங்களும் உள்ளன.*

*சந்தம் - அஷ்டார பங்க்தி(1) அனுஷ்டுப் (2,11,12) ஜகத் (3-6) த்ரிஷ்டுப் (7-9) யவமத்யா மஹாப்ருஹதி (10) )*

1. द्रापे अन्धसस्पते दरिद्रन्नीललोहित ।
एषां पुरुषाणामेषां पशूनां मा भेर्माऽरो मो एषां किं चनाऽऽममत्

**த்ராபே அந்தஸஸ்பதே தரித்ரன் நீல லோஹித**

**ஏஷாம் புருஷாணாம் ஏஷாம் பஶூனாம் மா பேர்மா**

**அரோ மோ ஏஷாம் கிம்சன ஆமமத்**

- மக்களின் துன்பத்தைப் போக்குபவனும், செல்வத்திற்கு அடிபணியாதவனும், சிவந்த நீலநிறமுடையவனும், ஸோமனின் அதிபதியும் ஆனவனே! நீ இந்த மக்களையோ, அவர்கள் கால்நடைகளையோ பீதியடையச் செய்யாதே. துன்புறுத்தாதே. அவற்றை நோயினால் பீடிக்க வைக்காதே.

2. या ते रुद्र शिवा तनूः शिवा विश्वाहभेषजी ।
शिवा रुद्रस्य भेषजी तया नो मृड जीवसे ॥

**யாதேருத்ர ஶிவா தனூ: ஶிவா விஶ்வாஹ பேஷஜீ**

**ஶிவா ருத்ரஸ்ய பேஷஜீ தயா நோ ம்ருட ஜீவஸே**

- மங்கலரூபியான உன்னிடம், நாங்கள் பிரார்த்திக் கிறோம். மங்கலமான, சர்வரோக நிவாரணமளிக்கும் அந்த மங்கல ரூபத்துடன் எங்களுக்கு வாழ்நாள் முழுவதும் 'ஆனந்தம்' என்னும் வரம் அருள்வாயாக.

(இந்த ரிக் புரிந்து கொள்ளக் கடினமானது. இதில் 'ஶிவ' என்னும் சொல் 3 முறைகளும் 'பேஷஜி' என்பது 2 முறை களும் காணலாம். 'BB' யின் அபிப்பிராயப்படி 'ஶிவனின்' மஹிமை இரு வகையானது. ஒன்று உலகாதயமான, குழந்தைகள், செல்வம் முதலியவற்றை வழங்குவது. மற்றொன்று ஆன்ம எழுச்சிக்குத் தேவையான, அழிவற்ற குணங்களை வழங்குவது. அவ்வாறு 'பேஷஜீ' யும் இரு

வகைப்படும். ஒன்றின்படி அவன் சாச்வதமான மருத்துவன். எப்பொழுதும் ரோக நிவாரணம் செய்து கொண்டே இருப்பவன். மற்றொன்றின்படி அவனுடைய ரோக நிவாரண சக்தி, அவனை அழைக்காவிடிலும் கூட செயல் பட்டுக் கொண்டே இருப்பதாகும்.)

**போஷணை செய்:**

*(பின்வரும் 3 முதல் 9 வரை உள்ள மந்திரங்கள் முன் கூறியபடி ரிக் வேத ஸம் ஹிதையில் உள்ளவை.)*

3. इ॒माꣳ रु॒द्राय॑ त॒वसे᳚ कप॒र्दिने᳚
क्ष॒यद्वी॑राय॒ प्र भ॑रामहे म॒तिम् ।

இமாம் ருத்[3]ராய த[1]வஸே க[1]ப[1]ர்தி[3]னே
க்ஷயத்[3] வீராய ப்[1]ர ப[4]ராமஹே மதி[1]ம்

- ஜடாதாரியான மஹத்தான ருத்ரனுக்கு, விரோதிகளை அழிப்பவனுக்கு, இந்த எண்ணங்களை (ஸ்துதியை) நாங்கள் அர்ப்பணிக்கிறோம்.

(கபர்தினே - ஜடாதாரி, பயங்கரமான உருவம் படைத்தவன். அஸாத்யமாக வேலை செய்யும் திறன் படைத்த அச்சமூட்டும் உருவம் படைத்த மருத்துகளின் தந்தை ருத்ரனே).
(க்ஷயத் வீராய - மனோ ரீதியான, எப்பொழுதும் வலிமையான எதிரிகளை அழிப்பவன்).

यथा॑ न॒ः शमस॑द् द्वि॒पदे॒ चतु॑ष्पदे॒
विश्वं॑ पु॒ष्टं ग्रामे᳚ अ॒स्मिन् अना॑तुरम् ॥

யதா[2] ந: ஶம்ஸத்[3] த்[3]விப[1]தே[3] ச[1]து[1]ஷ்ப[1]தே[3]
விஶ்வம் பு[1]ஷ்ட[1]ம் க்[3]ராமே அஸ்மின் அனாது[1]ரம்

- இம்முறையில் இருவகைப் பிரக்ஞை நிலை வளர்ந்து

வாழ்பவரும், நான்கு வகையான பிரக்ஞை நிலைகளையும் அடைந்தவரும் மகிழ்கின்றனர். சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களும் புஷ்டியாகவும் வியாதி அற்றவர்களாகவும் இருக்கட்டும்.

*(இருநிலை பிரக்ஞை - மனமும், வஸ்துக்களும் பற்றிய சிந்தனையில் இருப்பவர் (அன்னமய, மனோமய கோசங்கள்) நால்வகை பிரக்ஞை - நான்கு வகை கோசங்களை பற்றிய பிரக்ஞை அன்னமய, பிராணமய , மனோமய, விஞ்ஞான மய கோசங்கள்)*

**ஆனந்தம் அளி :**

4. मृडा नो रुद्रोत नो मयस्कृधि
यच्छं च योश्च मनुरायजे पिता

3 3 1 1 4
**ம்ருடா நோ ருத்ரோத நோ மயஸ்க்ருதி**

- ஹே ருத்ர! எங்களிடம் கருணையுடன் இரு. எங்களுக்கு ஆனந்தம் அளி.

3 4 1
**க்ஷயத்வீராய நமஸா விதேம தே**

- விரோதிகளை அழிப்பவனாகிய உன்னிடம் அடைக்கல பாவத்துடன் ஏவல் புரிவோமாக.

1 2 1 1 1 1
**யச்சம் ச யோஸ் ச மனுராயஜே பிதா**

- எங்கள் பிதா மனுவினால் அடையப்பட்ட சுகமான நல்வாழ்வையும், எந்தச் செயலையும் நன்கு புரியும் திறமையையும் (யோ - செயலில் அமைதி, தீய்மை வழியில் செல்லும் மனப்போக்கை தவிர்க்கும் திறமை)

तदश्याम तव रुद्र प्रणीतौ ॥

1 3 1 3 1 1
**தத் அஶ்யாம தவ ருத்ர ப்ரணீ தெள**

- ஹே ருத்ர! உன்னுடைய திறமையான வழி நடத்துதலால், நாங்கள் இந்த இரு லாபங்களை அடைவோமாக.

**காப்பாற்று :**

**5.** मा नों म॒हान्तं॑मु॒त मा नों अर्भ॒कं

**மா நோ மஹாந்தம்[1] மாநோ உத[1] அர்ப[4]கம்[1]**

- எம்மிடையேயுள்ள மஹான்களையும், சிறியவர்களை யும் (காப்பாற்று)

मा न॒ उक्षं॑न्तमु॒त मा नं उक्षि॒तम् ।

**மா ந உக்ஷந்தம்[1] உத[1] மா ந உக்ஷிதம்[1]**

- எம்மிடையே இருக்கும் சந்ததி உண்டாக்குபவரையும், சிறியவர்களையும் (காப்பாற்று)

मा नों वधीः पि॒तरं॒ मोत मा॒तरं॑

**மா நோ வதீ[4]: பிதரம்[1] மோத[1] மாதரம்[1]**

- எம்மையும், தந்தையரையும், அன்னையரையும் காப்பாற்று.

प्रि॒या मा नं॑स्त॒नुवों रुद्र रीरिषः ॥

**ப்ரி[1]யா மா நஸ்தனு[1]வோ ருத்ர[3] ரீரிஷ:**

- ஹே ருத்ர! எங்களுக்குப் பிரியமானவர்களின் தேகத்தைக் காப்பாற்று.

(**மா நோ வதீ[4]:** - எங்களுக்கு எந்தவிதத் தீமையும் நேராமல் இருக்கட்டும். காப்பாற்று)

(பரிணாம வளர்ச்சியின் அடிப்படையான சக்தி ருத்ரனே. அனைவரும் எல்லா விதத்திலும் வளர்வதை அவன் விரும்பு கிறான். அதற்குத் தேவையான பலத்தை ஒவ்வொரு தனி

மனிதனின் மேலும் பிரயோகிக்கிறான். அறியாமையில் மூழ்கி இருக்கும் மனிதர்களுக்கு அவர்கள் சுற்றத்தினருக்கு இந்த விதமான பலப்ரயோகம் ஹிதமாக இருப்பதில்லை. அதனால், அஞ்ஞானத்தில் உழலும், ஆனால் வளர விரும்பும் பக்தன் ''எனக்குப் பிரியமானவர்களுக்குத் தீங்கிழைக்காதே'' என்று பிரார்த்திக்கிறான்.)

**உன் கோபம் :**

6. मा नंस्तोके तनंये मा न आयुंषि

மா நஸ்தோகே தனயே மா ந ஆயுஷி

- எங்கள் குழந்தைகளையும், சந்ததிகளையும் எம் வாழ்வையும் காப்பாற்று.

मा नो गोषु मा नो अश्वेषु रीरिषः ।

மா நோ கோஷு மா நோ அஶ்வேஷு ரீரிஷ:

- எங்கள் ஆன்ம ஒளியையும், ஜீவ சக்திகளையும் காப்பாற்று.

वीरान् मा नों रुद्र भामितो वंधीः

வீரான் மா நோ ருத்ர பாமிதோ வதீ:

- ஹே ருத்ர! சினத்தில் எங்கள் வீரர்களை அழித்து விடாதே.

हविष्मंन्तो नमंसा विधेम ते ॥

ஹவிஷ் மந்தோ நமஸா விதேம தே

- நாங்கள் ஹவிர்பாகத்துடன், உன்னிடம் சரண் அடைகிறோம்.

7. आरात् ते गोघ्न उत पूरुषघ्ने

ஆராத் தே கோக்ன உத பூருஷக்னே

- எங்கள் கால்நடைகளையும், மனிதர்களையும் விட்டு, கொல்லும் சக்தி வாய்ந்த உன் பாணங்கள் விலகி இருக்கட்டும்.

क्षयद्वीराय सुम्नमस्मे ते अस्तु ।

க்ஷயத் வீராய ஸு¬ம்னம அஸ்மே தே அஸ்து

- வீரர்களையும் வெல்லுபவனே! உன் கருணை எங்களுக்கு உரியதாகட்டும்.

रक्षा च नो अधि च देव ब्रूह्यधा

ரக்ஷா ச நோ அதி ச தேவ ப்ரூஹ்யதா

- எங்களைக் காப்பாற்றிப் பாதுகாத்து, உன் கருணையில் தோய்ந்த செய்தியைச் சொல்.

च नः शर्म यच्छ द्विबर्हाः ।

ச நः பர்ம யச்ச த்விபர்ஹா:

- எங்களுக்கு இருநிலைகளிலும் மகிழ்வளி (இம்மையிலும் மறுமையிலும்)

(அனைவரையும் ஆன்மீக வளர்ச்சி அடையத் தூண்டுபவன் ருத்ரனே. பக்குவமடையாத ஒருவனைப் பக்குவப்படுத்தத் தேவையான பலத்தைச் செலுத்துகிறான். எவ்வாறு சிற்பி பலமுடன் உளியால் கல்லைச் செதுக்கி அதற்கு அழகிய உருவமளிக்கிறானோ அதே போல் ருத்ரனின் செயலும் அமைகிறது. நன்கு அறிந்த சுற்றத்தார்களின் கஷ்டங்களும் கால்நடைகளின் இழப்பும், ஆன்ம எழுச்சி அடைய விழைபவனை சரியான பாதையில் செல்ல வைக்கிறது.) (த்வி பர்ஹ - இம்மையும், மறுமையும்)

8. स्तुहि श्रुतं गर्तसदं युवानं

ஸ்துஹி ப்ருதம் கர்த ஸதம் யுவானம்

- ஹே மனிதா! பிரபலமான யுவனை, ரதத்தின் ஆஸனத்தில் அமர்ந்திருப்பவனைப் புகழ்வாயாக.

मृगं न भीममुपहत्नुमुग्रम् ।

